www.padippakam.com


# SOLT

STUDENT ORGANISATION OF LIBERATION TIGERS
(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX.)

14 ஜனவரி 1986 வேட்டு 7 அன்பளிப்பு 50p







விடுதலைப் புலிகளின் தளபதி பிரபாகரனுடன் பேட்டி!

## We are prepared for a long struggle



*It was almost like bearding the lion in its den, for a full-fledged interview with Velupillai Prabakaran, the legendary leader of the Liberation Tigers of Tamil Eelam (LTTE), is not all that easy. There is an aura of mystery around him, inspiring fear and awe not only in the top echelons of the Sri Lankan Government but also among his rivals in the other, lesser-known Tamil liberation organisations.*

*A self-taught ace sharp-shooter, he has built up the LTTE, which he calls "a guerilla force," from scratch to a well-knit, cohesive outfit "with a lot of intra-organisational freedom." The organisation is ruthless while taking on its enemies, be they Tamil informants or the Sri Lankan security forces, as its publication, The Diary of Combat, will show.*

*As a young boy, he was "fascinated" by India's freedom struggle. "I am a follower of Netaji Subhas Chandra Bose," he says.* 4ம் பக்கம் பார்க்க

## ஓர் கைத் துப்பாக்கியுடன் தொடங்கிய போராட்டம் வளர்கிறது...

அன்று மட்டும்... அந்தப் பதினறு வயதுக்கரங்கள்
குண்டுகக்கும்...கைத்துப்பாக்கி...ஏந்திய...
அந்த விடுதலைப் புலிகளின் கரங்கள்...
தயங்கித் தளர்ந்திருந்தால்...அஞ்சி...ஒடுங்கி..
அடிமைத் தளையிற்...சிக்கித் திணறியிருந்தால்...
இன்றெல்லாம்...விண்வரையோங்கி...அலைத்துலக
நாடுகளின் செவிகளையும் துளைக்குமளவிற்கு...
வளர்ந்து...பரந்து...வியாபித்து நிற்கும்...
தமிழீழ விடுதலைப் போராட்டம்...கருவுற்று...
உருப்பெற்றிருக்கத்தான் முடியுமா ?

6ம் பக்கம் பார்க்க

## தமிழீழத்தில் ஒரு கொரில்லா போராட்டம்

பிரபாகரன் -- நாங்கள் மேற்கொண்டுள்ள கொரில்லா யுத்தமுறை என்பது கண்மூடித்தனமாக, சாகச எண்ணத்துடன் எழுந்த ஒன்றல்ல. தவிர்க்கமுடியாத காலகட்டத்தில் தேசிய அடக்குமுறைக்கு எதிராக நாங்கள்மேற்கொண்டுள்ள, சரித்திரதேவைகளின் விளைவான ஒரு தர்மயுத்தப் பாதையாகும்.

சேகுவாரா -- கொரில்லாப் போராட்டம் ஒரு மக்கள் யுத்தம், ஒரு வெகுசனப் போர். கொரில்லா அணி மக்களின் முன்னணிப்படை, மக்களின் ஆயுத மையக்கரு.

மா. சேதுங் -- கொரில்லாப் போர்முறை வலிமைகுறைந்தோரின் ஆயுதம்.

பிடல்காஸ்ரோ-- இராணுவத்தினரும், காவற்படையினரும் துப்பாக்கிக் குண்டுகளிலிருந்து காப்புறுதி பெற்றவர்கள் அல்ல என்பதை செயல்மூலம் நிரூபித்துக்காட்ட வேண்டும்.

றெஜிடெப்ரே-- ஆரம்பத்தில் கொரில்லாக்கள் மக்களுக்கு அளிக்கக்கூடியது இரத்தமும் கண்ணீருமே அன்றி வேறொன்றும் அல்ல.

7ம் பக்கம் பார்க்க

"இனி ஒரு விதி செய்வோம்" விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# வேங்கை மடல்

அன்பு நண்பா!

எமது நத்தார் புதுவருட வாழ்த்துக்களைக் கூறி இம்மடலை ஆரம்பிக்கின்றேன். பிறந்துள்ள புதுவருடம் நம் இனத்திற்கு ஓர் பிரகாசமான வருடமாகவும், ஒளிமயமான வருடமாகவும் ஒளிர எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவாராக.

நண்பா! வெளிநாடுகளில் வாழும் நம் போன்ற இளைஞர் மட்டுமல்ல, தமிழ் பேசும் அன்புள்ளங்கள் யாவருமே ஒவ்வொரு நாளும் நம் தாயகச் செய்திகளை ஆவலுடன் கேட்டு அறிகிறோம். சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறைகளுக்கும் ஒழிப்பு முறைகளுக்கும் பழக்கப்பட்டு, அந்த அரக்கர்களை எதிர்க்க நம் சகோதர சகோதரிகள் தயாராகி வருகின்றனர். சாலையோரத்திலே குரும்பை விற்ற சிங்கள காடையர்களும், வழிப்பறிக் கொள்ளையை வேலையாகச் செய்த காடையர்களும் இன்று சிறிலங்கா அரசின் இராணுவ வீரர்களாக்கப்பட்டு தமிழ் பகுதிகளிலுள்ள இராணுவ முகாம்களில் கடமைக்காக அமர்த்தப்பட்டுள்ளனராம்.

ஆம் நண்பா! இவ்வாறு அமர்த்தப்பட்டு இராணுவவீரர்கள் என முத்திரை பொறிக்கப்பட்ட அந்தக் காடையர் கூட்டம் தமது காட்டுமிராண்டித்தனத்தை தமிழ் பகுதிகளிலே காட்டி அவ்வப்போது நம் வீரம் கொண்ட வேங்கைகளிடம் முறையான பாடத்தைக் கற்று வருவதையும் நீ அறிந்திருப்பாய். அன்று ஆயுள் கைதிகளாயும், தூக்குக் கைதிகளாயும் நீதி மன்றத்திலே தண்டனை பெற்றே குற்றவாளிகள் கோட்டையில் அடைக்கப்படுவர். ஆனால் இன்று அரசாங்கத்தின் பயங்கரவாதிகளான இராணுவமும், பொலீசும் நம் வேங்கைகளின் தண்டனை பெற்று மரணக் கைதிகளாக கோட்டையினுள் அடைக்கப்பட்டுள்ளனர். அன்று கோட்டையில் அடைக்கப்பட்ட கைதிகள் தப்பித்துக்கொள்ள களவாக ஓடுவதுண்டு. அவ்வாறு தப்பித்துக்கொள்ளும் கைதிகள் மீண்டும் உயிருடன்தான் பிடிபடுவார்கள். ஆனால் இன்றைய கைதிகளான இராணுவம் கோட்டையை விட்டு தப்பிக்க எண்ணுவதில்லை, அவ்வாறு வெளிவர முனைந்தாலும் வேங்கைகளின் வேட்டுக்கு இரையாக்கப்படுகின்றனர்.

நண்பா! ஆனால் இன்று சிங்கள வெறியர்களின் கொடுமையுடன் நம் இனத்தில் தோன்றியுள்ள அரக்கர்களின் வெறிக்கும் பலியாகும் நம் உடன் பிறப்புக்களின் பரிதாபகரமான நிலைகளை அறியும் போது குருதியே உறைந்து விடுகின்றது. நம் இன விடுதலைக்காக முதல்முதலாக நான்கு பேருடன் ஆரம்பிக்கப்பட்டது நம் புலிப்படை இயக்கம்தான் என்பதை யாராலும் மறக்கவோ அல்லது மறைக்கவோ முடியாததாகும். இன்று ஆயிரமாயிரம் இளைஞர்கள் தன்மானம் கொண்ட தங்கத்தம்பியின் கைகளினால் தட்டி வளர்க்கப்பட்ட வீரம் கொள் வேங்கைகளாக மக்கள் மத்தியில் திகழ்கின்றார்கள்.

நண்பா! ஆரம்பத்தில் நமது இயக்கத்தின் கட்டுக்கோப்புக்கும், குறிக்கோளுக்கும் அமைந்த வீர வேங்கையாகத் திகழ முடியாத சிலரை நமது இயக்கம் தூக்கி எறிந்தது. அவ்வாறு தூக்கி எறியப்பட்டவர்கள் தம் சுய ஆதாயங்களை நோக்கமாகக் கொண்டு நம் இனத்திற்கு விடுதலை பெற்றுத் தரப் புறப்பட்டதாகக் கூறி இயக்கங்களை அமைத்து இன்று நம் இனத்திற்கே ஓர் புற்று நோயாக வளர்ந்து வந்துள்ளதை அன்று தான் நீ அறியாவிட்டாலும், நிச்சயமாக இன்று நீ உணர்ந்திருப்பாய்.

நண்பா! அல்ஜீரிய மக்களின் விடுதலை வரலாற்றை புரட்டிப் பார்த்தால் நீயும் புரிவாய். அவர்களும் விடுதலை அடைவதற்கு, பல இயக்கங்கள் அவர்களுள் தோன்றினதான். ஆனால் அவ்வாறு தோன்றிய இயக்கங்கள் யாவும் ஒரே கொள்கையுடையனவாயும், ஒரே குறிக்கோளையே கொண்டனவாயும் திகழ்ந்தன. அவை அவ்வாறு திகழ்ந்ததால் ஒன்றுக்கொன்று உதவியாகவும் சார்புடையனவாகவும் திகழ்ந்தன. வெளியுலகுக்கு தம்மிடையே பிரிவுகள், பிணவுகள் இருப்பதாகக் காட்டிக் கொண்டு உள்ளகத்தே ஒன்றித்தவர்களாய் இருந்ததால் தாம் கொண்ட இலட்சிய விடுதலையை அடைந்தனர்.

நண்பா! ஆனால் அவ்வியக்கங்கள் ஒன்றின் மீது ஒன்று வேட்டுக்களைத் தீர்க்கவில்லை. கை, கால்களை வெட்டியும், கண்களை பிடுங்கி கோரத்தனமாயும், மிருகத்தனமாயும் கொலைகள் செய்து புதைக்கவும் இல்லை. விடுதலைக்காய் தம்மை அர்ப்பணித்த இளைஞர்களைக் கொண்டு போதை வஸ்து வியாபாரம் செய்யவும் இல்லையே. விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்த வீராங்கனைகளை விலை மாதர்களாக்கி விபசார விடுதி நடத்தவும் இல்லையே, ஆம் நண்பா! இந்தப் போலி இயக்கங்களை நம்பி ஏமாந்து இன்று எத்தனை சகோதரிகள் விலை மாதர்களாக மீள முடியாத துயரத்தில் மூழ்கியுள்ளனர். எத்தனை இளைஞர்கள் கட்டாயத்தின் பேரில் போதை வஸ்து கடத்தி வெளிநாடுகளில் வருடக் கணக்காய் நிலத்தின் கீழ் சிறை வாசம் அனுபவிக்கிறார்கள்.

நண்பா! இவ்வாறான கொடுமைகளை செய்தவர்களையும், செய்பவர்களையும் நாம் இனம் கண்டு கொள்ளவேண்டும்.

"இளைதாக முன்மரங் கொல்க களையுநர்
கை கொல்லுங் காழ்த்த விடத்து"

என வள்ளுவர் திருக்குறளில் கூறுவது போன்று களைய வேண்டிய முள்மரத்தை அது இளைதான பொழுதே களைந்து விட வேண்டும். முதிர்ந்த பின் அதனைக் களைய முனைந்தால் அது களைபவர் கைகளைத்தான் களைந்து விடும். இந்த சுய நலக்கும்பல்களை இன்னமும்தான் நாம் கண்டிக்காமலும், தண்டிக்காமலும் இருந்தால், நிச்சயமாக கொடிய சிங்களவரின் கொடுமையைவிடக் கொடியதாகவே அமையும்.

3ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

## வேங்கை .....

நண்பா! இந்தப் போலித் கும்பல்களின் கொடூரத்தனங்களை நீ மட்டுமல்ல வெளிநாடுகளில் வாழும் சகல தமிழ் மக்களும் அறிவர். நம் இன அழிவினை வாய்ப்பாக வைத்து கடவுடைய நாமத்தைக் கொண்ட ஏமாற்றுக் கூட்டமும், கடவுள் நாமத்தைக்கூறி பொய்பிரச்சாரம் செய்து ஏய்த்துப் பிழைக்கும் கூட்டமும், வெளிநாடுகளில் பணத்தின் மேல் பணமாகச் சேர்த்து சுக போகமாக வாழ்கிறார்கள். நம் மண்ணில் நம் உடன் பிறப்புக்கள் கருகி உருக்குலைந்து, துன்பத்தின் மேல் துன்பங்களை அனுபவிக்கும் இந்த நிலையில் இப்படியானவர்களைக் காணும் போது வேதனைப்பட வேண்டியேயுள்ளோம்.

நண்பா! நம்மிடையே இத் துரோகக்கும்பல்கள் துறவிகளாயும், விடுதலை உணர்ச்சி மிக்கவர்கள் போன்றும் பல வேடம் தரித்து வருகிறார்கள். ஆரம்ப காலம் தொடக்கம் பல விதமாக வேடம் போடத்தெரிந்த இவர்கள் தொடர்ந்தும் மக்களை ஏமாற்றி வாழலாம் என வீண் கனவு காண்கிறார்கள். ஆனால் கால மாற்றத்தால் இன்று நிகழும் நிகழ்ச்சிகளை இருப்பவர்களும் அறிவார்கள், விரைவில் இக் கும்பல்களின் முகமூடிகள் கிழித்தெறியப்படத்தான் போகிறது.

நண்பா! நம் இனத்திற்கு இப்படிப்பட்ட துரோகங்களை, கயமைத்தனமான செயல்களை செய்து வருபவர்கள் தாமாகவே உணர்ந்து இந்தச் செயல்களை கைவிட்டு நம் இன விடுதலைக்காக உழைக்க முடியாது போனாலும் துன்பங்களாவது செய்யாமல் இருந்தால் நம் இனத்திற்கு நன்று, அவர்களுக்கும் நன்மையாக இருக்கும். எனவே இவ்வாறான நண்பர்கள் மனந் திருந்தி நம் தாயக இலட்சியத்திற்கு என அவர்களால் முடிந்தால் உண்மையான ஒத்துழைப்பு தர வேண்டும் என இறுதியாகவும், உறுதியாகவும் வேண்டுகோள் விடுத்து, இம் மடலை முடித்து அடுத்த மடலில் தொடரக் காத்திருக்கிறேன்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

அன்பு நண்பன்
செபமாலையர்.






எமது தாய் இயக்கமான விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம். தமிழகம். வெளியிட்டுள்ள Pocket Calendar எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகட்கு --

**SOLT (U.K.)**
258 GREEN STREET
LONDON E7 8LF UNITED KINGDOM
TEL: 01-475 0356


"சுதந்திரத்திற்கு விலையாக எங்கள் உயிரையே கொடுக்கத் தயாராக உள்ளோம்"

— விடுதலைப் புலிகள் தலைவர்
வே. பிரபாகரன்



1986 SOLT

| | JANUARY | FEBRUARY | MARCH | APRIL | MAY | JUNE | |
|---|---|---|---|---|---|---|---|
| M | 6 13 20 27 | 3 10 17 24 | 3 10 17 24 31 | 7 14 21 28 | 5 12 19 26 | 2 9 16 23 30 | M |
| T | 7 14 21 28 | 4 11 18 25 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 3 10 17 24 | T |
| W | 1 8 15 22 29 | 5 12 19 26 | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 | 4 11 18 25 | W |
| T | 2 9 16 23 30 | 6 13 20 27 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 | T |
| F | 3 10 17 24 31 | 7 14 21 28 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 | F |
| S | 4 11 18 25 | 1 8 15 22 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 | S |
| S | 5 12 19 26 | 2 9 16 23 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 | S |

| | JULY | AUGUST | SEPTEMBER | OCTOBER | NOVEMBER | DECEMBER | |
|---|---|---|---|---|---|---|---|
| M | 7 14 21 28 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | M |
| T | 1 8 15 22 29 | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 | T |
| W | 2 9 16 23 30 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 | W |
| T | 3 10 17 24 31 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 | T |
| F | 4 11 18 25 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 | 5 12 19 26 | F |
| S | 5 12 19 26 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 | S |
| S | 6 13 20 27 | 3 10 17 24 31 | 7 14 21 28 | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 | S |

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

ONE RUPEE

### விடுதலைப்புலிகளை அடிமையாக்கும் ஓர் விடயம்

தமிழீழ மழலைகள்

எம் எதிர்காலச் செல்வங்கள்

இதன் அணைப்பில் தம்மை மறந்து ஆனந்தப்பட்டு அதிலேயே லயித்து விடும் விடுதலைப்புலிகள்.

ஆம்!

குழந்தைகள் என்றால் இவர்களுக்கு உயிர்.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



1ம் பக்கத் தொடர்ச்சி

# விடுதலைப் புலிகளின் தளபதி பிரபாகரனுடன் பேட்டி!

*The 31-year-old Prabakaran is called "Thamby" by his cadres. His disappearance from Madras from around August 20, followed soon after by the deportation of the LTTE's spokesman, A. S. Balasingam, caused consternation in ENLF circles and delayed the ENLF leaders' (including himself) meeting with Prime Minister Rajiv Gandhi by a full month. But once he surfaced in Madras, things started moving on an even keel.*

*Prabakaran was interviewed by FRONTLINE on November 6 at 9 a.m. The same evening, he left for Delhi with other ENLF leaders for discussions with Foreign Secretary Romesh Bhandari. His top lieutenants, Tilakar and Yogi, were with him during the entire interview and they were later joined by another top aide, Subramanian.*

**FRONTLINE:** How were you attracted to the liberation movement? What were the factors that impelled you to take up this cause?

**Prabakaran:** It is a long story. When I was young, my parents used to talk a lot at home against the 1958 racial riots directed against the Tamils in which many people were affected. This affected me. I used to read a lot of books which came from Madras, including magazines like *Ananda Vikatan, Kalki, Kumudam*, etc..... All magazines used to run stories on India's freedom struggle, which used to fascinate me. Besides, books like Mahabharata, which says that good will vanquish evil, left a deep impress on me.

When I was studying in school, I used to receive private tuition from a master called Home-Guard V. Navarathinam, who had left the Tamil Federal Party. The youth of the Federal Party also followed suit. He used to talk to us on the various world movements, how nothing can be accomplished by parliamentary means, etc. I was 15 years old then and I got the feeling that we also should hit back and that we should have a separate country of our own.

**Q:** What is the LTTE's ideology? Unlike other organisations, the LTTE began as a military outfit and later acquired Marxist-Leninist leanings. Some organisations like the EPRLF began as a "communist party" and later added a military wing.

**A:** We had an ideology from the beginning—that was to form a socialistic State. If we did not give shape to that ideology, it was because we (LTTE) got straightway into the struggle.

**Q:** What is your outlook on Eelam, towards the struggle, the experiences of your sufferings? Do you think you can achieve Eelam?

**A:** The chances of attaining Eelam are bright because the people's determination is firm. We are prepared for a long-drawn struggle (to attain Eelam).

**Q:** The LTTE's general style of operation seems to be to indulge in hit-and-run tactics. But after a hit-and-run attack, the Army turns on the Tamil civilians. For example, it is widely believed that your ambushing and killing the 13 soldiers presaged the 1983 riots against the Tamils. Other liberation organisations like the PLO and the IRA do not indulge in hit-and-run tactics. Further, they have expanded their base among the people. Have you expanded your base?

**IRA TACTICS**

**A:** For the PLO, there is no room for adopting hit-and-run tactics because they are fighting from a foreign soil. The IRA is fully indulging in hit-and-run operations. But the British Army does not attack the civilians.

But, we work with a lot of hardship—in terms of finance and the resistance from (Sri Lankan) military. Yet, in Jaffna and other places, we have controlled the Army and we have made them into liberated zones. This was because, there is no gap between the people and us. In Jaffna, and in Nilaveli at Trincomalee..... these areas are under our control. There is no Government control.

We are running the civil administration. This means, we have gone a step above the hit-and-run methods. Even though we adopted hit-and-run methods in the beginning, gradually, we have not allowed the troops to come in and as time goes on, it will become a mass struggle. Right now, in places like Jaffna, it has become a mass struggle.

Besides, we are running a guerilla force. Out of several tactics in guerilla warfare, one is hit-and-run. In the initial development of the LTTE, we did hit-and-run operations. But now, after an attack, we give protection to the people. The Sri Lankan Government attacks the people because we are close to the people and also it does it to create a gap between the people and us. Without people's support, we would have been betrayed and our movement would not have been there.

**Q:** To go back, have you expanded your base among the people, like have you established trade unions, etc.?

**A:** Outwardly, we don't have trade unions. In all places, the LTTE's base has expanded.

**Q:** What is your attitude towards the Government of India, its efforts to bring about a solution to the crisis? Is it pressuring you to accept a solution?

**A:** Till now, we have not been pressured. At the same time, the Government of India is trying to solve the problem through talks. But our history shows that nothing can be solved through talks. Yet, we have to support the Government of India's efforts and so, we are taking part in the talks.

But at the same time, the Sri Lankan Government has not, so far, arrived at any worthwhile solution. For example, it is violating the ceasefire and it has not properly implemented it. There should be peace as a prelude to talks (with the Sri Lankan Government). Every day they are killing us.

**Q:** Supposing, all the Tamil liberation organisations are asked to go out of India, what will you do?

**TRAINING BASES**

**A:** All our important training bases are in Sri Lanka. We are here only to expose the political situation there. We are prepared to go back to our country any time. As the Sri Lankan Government accuses us, we do not have any training bases or anything here. All our training bases, recruitment, are all done in our country. These problems can never affect us.

**Q:** Recently, you went on a tour of Tamil areas of Sri Lanka and you also met your regional commanders. How is the morale of your cadres and what is the situation there?

**A:** There is only progress (increasing determination). There is no retardation in the struggle. There is a feeling dominant among the people that instead of slowly dying in batches, it is better to fight and die all together.

Our boys..... comrades..... are closer to the people. As a result, they are strong and firm. There cannot be any talk on morale because as long as there is one soldier (in the LTTE), they will fight for our ideal (to achieve Eelam). Till there is a last comrade, we will fight for our independence..... liberation.

**Q:** Do you think anything will come out of the talks (with the Sri Lankan Government)?

**NO FAITH**

**A:** We don't have faith. We know the history of the last 30 years and Jayewardene's history also. Even common people do not have any faith (that anything will come out of the talks). When the Government of India invites us for talks..... it gives us political support..... For its satisfaction, we are participating. But the results are in Jayewardene's hands. I don't have faith that he will put forward something (viable proposals).

**Q:** What do you think of Prime Minister Rajiv Gandhi's approach and also of Foreign Secretary Romesh Bhandari?

**A:** As far as Rajiv Gandhi's approach is concerned, he thinks he can solve this through peaceful means, viz., talks. Destruction is certain through struggle. He wants to minimise the scale of destruction and is trying to solve the problem. When it is a struggle, it will be long-drawn. Even the refugee problem will be there for the Government of India. So, Rajiv Gandhi wants to solve it through peaceful means. But Jayewardene is falsifying such efforts.

Romesh Bhandari's approach..... He is a representative of the Government of India. On behalf of the Prime Minister, he is trying his level best to

6ம் பக்கம் பார்க்க

**தமிழீழம் மலரும்வரை போராடுவோம்!**

படிப்பகம்

www.padippakam.com




## இலண்டன் வாழ் தமிழ் மக்களே !

## உங்களுக்காக ஒரு மென்மையான கீதம்.

விடுதலைப் புலிகள், மென்மையான இதய உணர்வுகளையெல்லாம் இதயத்தின் ஆழத்தில் அடக்கி வெளியில் உலாவி வரும் சிறு குழந்தைகளே !
அந்த இதயங்களின் மென்மை, அன்பு, பாசம், இரக்கம் எம் இதயங்களைத் தொட்டுத்தான் இருக்கின்றன !
இலண்டன் வாழ் தமிழ் மக்களே !
உங்கள் இதயங்கள் மட்டும் விதி விலக்காகலாமா !

விடுதலைப் புலிகளினது, றோஜா இதழைவிட மென்மையான இதய உணர்வுகளின் ஆழத்தை ஆராய்ந்து பார்ப்பதற்காகவும், வருடிப்பார்ப்பதற்காகவும் ஒரு தமிழீழ விடுதலைப்புலியினது, எக்கணமும் நிச்சயமற்ற அந்த மென்மையான இதயத் துடிப்பிலிருந்து ஒரு மென்மையான கீதம் இசைக்கப்படுகின்றது.




அந்த இதயகீதத்தினை இந்த மழலையினால் அநுபவிக்க முடியுமானால் ஏன் உங்களால் முடியாது ?

ஒரே ஒரு தடவை, ஓரிரு நிமிடங்களே முயன்று பாருங்களேன் !

# தமிழ் மக்களுக்கு தமிழீழ விடுதலைப் புலியிடமிருந்து

### மக்கள் எம்மை விமர்சிக்க வேண்டும்

தமிழீழ விடுதலைப் போராட்டமே தமிழ்பேசும் மக்களுக்கானது. அவர்களின் உரிமைக்கானது. அவர்களின் சுதந்திரமான சுபீட்சமான வாழ்வுக்கானது. நாம் ஆயுதமேந்தி போராடுவதே எம் மக்களின் விடிவிற்காக. எமது இயக்கம் மிகப்பரவலாக விரிவடைந்து இன்று தமிழீழ மக்கள் மத்தியில் இரண்டறக் கலந்து பல்வேறு வேலைத் திட்டங்களை, செயற்படுத்தி வருகின்றது.

இயக்கத்தினுள் பூரண கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நாம் அதி கூடிய ளவு பேணி வருகிறோம். எந்தஒருமுடிவும் தலைமைப் பீடத்தின் அனுமதியுடனேயே நடைமுறைப்படுத்தப் படுகின்றது.

மக்களை பாதிக்கும் துன்புறுத்தும் எந்தச் செயலை (எமதியக்கத்தை சேர்ந்த) எவர் செய்தாலும் அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க இயக்கத்திற்கு பூரண அதிகாரமுண்டு இத்தகைய கட்டுப்பாடும் கட்டுக்கோப்பும் இயக்கத்தினுள் பூர்ணமாக நடைமுறைப் படுத்தப் படுவதால் எமதியக்கத்திலுள்ளோர் நூற்றுக்கு நூறுவீதம் எதுவித தவறுமின்றி நடப்பார்கள். என அடித்துச் சொல்லவில்லை.

நடைமுறையில் எமதியக்க உறுப்பினர்களின் எத்தனையோ குறைகளை குற்றங்களை பிழைகளை மக்கள்சுட்டிக்காட்டி விமர்சித்ததை யடுத்து நாம் எம்மை திருத்தியிருக்கிறோம்; புனரமைத்துக் கொண்டிருக்கிறோம்.

எமதியக்க நடைமுறையில் எமது உறுப்பினர்களின் நடத்தையில் குற்றம் குறைகள் உண்மையாயிருப்பின் தங்கு தடையின்றி எம் மக்கள் யாரும் இதைப்பற்றி பூரண சுதந்திரத்துடன் விமர்சிக்கலாம்.

எமது இயக்கம் நூற்றுக்கு நூறு வீதம் இலட்சியத் தன்மை உடையதல்ல தவறுகள், குற்றங்கள் குறைகள் சுட்டிக் காட்டப்படும் போது தான் நாம் எம்மை திருத்திக் கொள்ளமுடியும் இயக்கம் எதுவித பிழையுமின்றி நடக்கும் பழுத்த அனுபவஸ்தவர்களைக் கொண்டதல்ல, சாதாரண உங்கள் மத்தியில் உள்ள "பொடியளை"க் கொண்டு கட்டப்பட்டதே இயக்கம். இந்த இயக்கத்தை திருத்த வேண்டிய சீரமைக்க புனரமைக்க வேண்டிய பொறுப்பு மக்களுடையதே.

உங்கள் மத்தியில் உள்ள மாமனையோ, மச்சானையோ, சகோதரர்களையோ, பிள்ளைகளையோ கொண்டது தான் இயக்கம் நடைமுறை கால வாழ்வில் இவர்கள், குணதிசயங்களை தூக்கி எறிந்து துறவியானவர்களல்லர்.

உங்கள்பிள்ளைகளை இரத்தத்தை திருத்துவது யார் நாம் எம் சொந்த பந்தங்களை தாய், தந்தையரை துறந்து நெடுந்தூரம் வந்து விட்டோம். ஒவ்வோர் தமிழீழ தாய் தந்தையும் எம் தாய், தந்தையே சகோதரனும் சகோதரியும் எம் சகோதரன் சகோதரி தான் நீங்கள் எம்மை பாசத்துடன் திருத்தாமல் கண்டிக்காமல் விட்டால் எம்மை யார் திருத்துவது? யார் கண்டிப்பது?

மேலும் ஓர் கருத்து மக்கள் மனதில் உள்ளது "புரட்சிக்காரர்கள் அல்லது போராட்டக் காரர்கள் கல்நெஞ்சு படைத்தவர்கள் கொடுரத்தனம் மிக்கவர்கள், பயங்கரமானவர்கள், அன்பு பாச உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவர்கள்"

ஆனால் இந்த இதயங்களின் ஆழத்தைஆராய்ந்து பார்த்தவர்களுக்கு வருடிப் பார்த்தவர்களுக்கு தெரியும் அந் நெஞ்சங்களின் துடிப்பு!

அந்த இதயங்களின் மென்மை, அன்பு, பாசம் இரக்கம்போலியானதன்று உண்மையானது, என்றும் வாழ்கின்றது இவைகளுக்காக உயிரைக் துறக்க கூடியளவு கூட இறுக்கமானது றோஜா இதழை விட மென்மையான இதய உணர்வுகளையெல்லாம் இதயத்தின் ஆழத்தில் அடக்கி வெளியில் உலாவிவரும்சிறுகுழந்தைகள் இவைகள்.

6ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# ஓர் கைத் துப்பாக்கியுடன்.....

1ம் பக்கத் தொடர்ச்சி

அந்தக் கரங்கள்...
தன்னலக் கோட்டைக்குள் நம்மையடக்கியிருந்தால்..
பட்டமும்...பதவியும்...பெற்றுப்...பணத்தில்
மிதந்திடவெனக் கற்றிடச் சென்றிருந்தால்...
கனவினில் மிதந்திருந்தால்...

அந்தக் கரங்கள்...
மஞ்சத்தில் மகிழ்ந்து... மதுவிலே மிதந்து...
ஐந்திற்கும்...ஆறிற்கும்...நெஞ்சையே
விற்றிருந்தால்...எம்தாய்த்திரு நாட்டில் இன்னொரு
விடுதலையுத்தத்தைத்தான் பார்த்திருப்போமா ?

அந்தக் கரங்கள்...
சமூக விரோதிகளையும்...பணம்படைத்த...
சாதிக்க வெறியர்களையும்...சந்தர்ப்பவாத
அரசியல்வாதிகளையும்...அடிவருடியிருந்தால்...

இன்னொரு புரட்சியின் சுகந்தத்தை...
எம் தாய்மண் அனுபவித்திருக்குமா ?

அந்தக் கரங்கள்...
சிங்களப் பௌத்த ஏகாதிபத்தியத்தின்...
சிறுமைத்தனங்களையும்...திட்டமிட்டுச் செய்யப்
பட்டுவந்த இன ஒடுக்குமுறைகளையும்...
கொடுமைவழியும்...அரக்கத்தனங்களையும்...
எதிர்த்து நிற்கத்தாமதித்திருந்தால்...தமிழினத்தின்
அழுகுரல்...கண்ணீரிலல்லவா கரைந்துபோயிருக்கும்
படிப்படியாக..,மொழியும்...கலையும்...
நிலமும்...சிங்கள வெறிக்கு இரையாகியிருக்கும் '

அந்தக் கரங்கள்...
தாங்கிய அந்த ஒரு துப்பாக்கியே...இன்று...
எமக்கு ஒரு வரலாற்றைப்பிறப்பித்திருக்கிறது '
ஒரு துப்பாக்கியுடன் ஆரம்பமான அந்தப்போராட்டம்
இன்று ஓரினத்தின் விடுதலையையும்...தேசிய
விழிப்புணர்ச்சியையும்...வழிநடத்திச் செல்கிறதென்றால்
அது மிகையாகமாட்டாது '

தேசியம்...பேச்சில் மட்டும் புத்திட முடியாது '
நமது சிந்தனையில்...நமது மனோபாவத்தில்...
அதனிலும் மேலாக நமது செயலில்...புத்திடுதல்
அவசியமாகும் '
பொருளாதார அபிவிருத்தியும்...தொழில் சமத்துவ
மும்...எமது தாய் மண்ணின் பலத்திற்கும்...
வளத்திற்கும் ஆதாரமானவை '
அதுமட்டுமல்லாமல் இன்றைய காலகட்டத்தில்...இது
எமது விடுதலைப் போராட்டத்தின் ஒரு முக்கிய...
பகுதியுமாகும் '
இக்கருத்துக்களின்...பிரதிபலிப்பிலேயே...இன்று...
தமிழீழத்தில்...விடுதலைப் புலிகளின்...
பொருளாதாரப் புரட்சி...வெடித்துள்ளது '
தொழிலுக்கும்...சாதிக்கும் முடிச்சுப் போட்ட
வரலாறு ...கட்டையேறிவிட்டதை...நாளும்...
பொழுதும்...நமது தாய் நிலம்...உணர்ந்துவருகிறது

எதிரியை நோக்கிய போராட்டத்தோடு நில்லாது..
தேசியப்பற்றினையும்... தெளிவான அரசியல் விளக்க
த்தினையும்...பொருளாதாரப் புரட்சியின் அவசியத்
தினையும்...நம் இனம் விளங்கிக்கொள்ளும் வகையில்
கலை நிகழ்ச்சிகளை...ஆங்காங்கே...நடத்திவரும்
விடுதலைப் புலிகளின் கலாச்சாரப் படை...தமிழீழ
மக்களை அந்த விடிவெள்ளியை நோக்கி...நகரச்
செய்கின்றது '

எனினும் இந்தப் போராட்டத்திற்கு வெளியே...இந்தப்
போராட்டத்தின் அவதானிகளாகவும்...விமர்சகர்களா
கவும்...இருந்துகொண்டு...காலந்தள்ளும்...
பிரதிநிதிகள் மட்டும்...சற்றுத்...தங்களையும்
போராட்டத்தில் இணைத்துக் கொள்வார்களேயானால்..
எமது வெற்றியைத் தடுக்கும்சக்தி...எதுவுமேயிருக்க
முடியாது '

விடுதலைப் போராளிகளுக்கு...விடுதலைப் புலிகளுக்கு
கடல் கடந்து வாழ் தமிழ் மக்கள்...ஒன்று திரண்டு
ஒருவழிப்பாடான உதவியையும்...ஆதரவையும்...
வழங்குவார்களானால்...
நமது தாய்நிலத்தில்...தமிழனாட்சி...கொடி
கட்டிப் பறக்கும் நாளை...நாம் மிக விரைவிற்
சந்திக்க முடியும் '

விடுதலையெனும் பெயரை உச்சரித்து...விசத்தைக்
கக்கிக்கொண்டிருக்கும்...நமது இன விரோதிகளும்
கொலை...கொள்ளைக்காரர்களும்...இருந்த
இடந் தெரியாமல் ஒழிந்திட முடியும் '

கடல்களைத் தாண்டிக் கேட்கிறது
வீறிட்ட சிசுக் குரல்
காப்புடைந்த பெண்ணின் கதறல்
கனன்றெரியும் வீட்டின் குமுறல்

4ம் பக்கத் தொடர்ச்சி

solve the problem through peaceful means. But till now, Jayewardene has not implemented even the terms and conditions of the ceasefire. So, Romesh Bhandari has not succeeded even in ceasefire efforts.

**Q:** What is your assessment of the Thimpu talks, the proposals offered by the Sri Lankan Government?

**A:** There cannot be talks till peace prevails. The Thimpu talks made the people hate us. If the Sri Lankan Government is not keen on a peaceful atmosphere, how can you believe that it will implement the proposals offered?

**Q:** There is a belief that there is not much democracy either in your organisation or other Tamil militant organisations. Is it true?

**A:** You should ask our organisation's members that question. We have given them so much of freedom. There is no problem like that.

5ம் பக்கத் தொடர்ச்சி

இது எழுதுவதற்காக எழுதப்பட்ட எழுத்தல்ல. அனுபவிக்கப்பட்ட உண்மைகள் இந்த இதயங்களின்உணர்வுகள் சாதாரண சராசரி உணர்வுகளில் இருந்து வேறுபட்டது. தீவிரமான உணர்ச்சி கொந்தளிப்பை இவ் உள்ளங்களின் ஆழத்தில் என்றும் காணலாம். ஓர் மரண வீட்டில் போலிக்காக அழுது ஒப்பாரி வைத்து கண்ணீர் சிந்துவதும், போலிக்காக சிரிப்பதும் உள்ளே நஞ்சை வைத்து வெளியே வேறொன்றை கதைப்பதும் இவைகளுக்குத் தெரியாது.

தெளிந்த மனதில் எதையுமே உண்மைக்காக மட்டுமே வாழும் இவ் இதயங்களின் துடிப்பு எக்கணமும் நிச்சயமற்றது.

மேற் கூறப்பட்டவையெல்லாம் விடுதலைப் போராளிகளைப் பற்றி ஆம் விடுதலைப் போராளிகளை பற்றி மட்டுமே.

எதிர்கால தலைமுறைகளின் சுபீட்சத்திற்காக சுதந்திரத்திற்காக தம்முயிரை தியாகம் செய்யும் இவைகளின் வாழ்வு?...

படிப்பகம்

1ம் பக்கத் தொடர்ச்சி

# தமிழீழத்தில் இரு கொரில்லா .....

ஒரு அரசியற்போராட்டத்தில் அதி உச்சக்கட்டமாக, அப்போராட்டத்தின் வளர்ச்சியும், முதிர்ச்சியும் அடைந்த நிலையில், புரட்சிகர ஆயுதப்போராட்டம் தோற்றம் கொள்கிறது. இது உலகளாவிய வரலாற்று உண்மை. உலக சோசலிசப் புரட்சிகளும், தேசிய விடுதலைப் போராட்டங்களும் ஆயுதம்தாங்கிய புரட்சிகர போராட்ட பரிணாமம் பெற்றவையே.

அதாவது அடக்கு முறைக்கு எதிராக சகலவிதமான சமாதான வழிதழுவிய போர் முறைகளையும் கையாண்டு தோல்வி கண்ட மக்கள், வேறெந்த வழியுமற்ற சூழ்நிலையில் ஆயுதம் தாங்கிய புரட்சிகரப் போராட்டத்தில் குதிப்பது தவிர்க்க முடியாதது என்பது உலகளாவிய வரலாற்று உண்மை. தமிழீழத் தேசிய சுதந்திரப் போராட்ட வரலாறும் இந்த உண்மைக்குப் புறம்பானதல்ல.

திசை தெரியாது தடுமாறிய தமிழரின் அரசியல் போராட்டம் ஆயுதப் போர் வடிவப் பரிணாமம் பெற்று ஒரு உயர்ந்த நிலைக்கு இன்று முன்னேற்றம் கண்டுள்ளது.

ஆயுதப் போராட்டத்தை ஒரு புரட்சிகர இலட்சியத்தின் அடிப்படையில் வரித்து, ஒரு கட்டுப்பாடான இரகசிய இயக்க அமைப்பை உருவாக்கி, கொரில்லாப் போர்முறையை மக்கள் போராட்ட வடிவமாக தமிழீழத்தில் அறிமுகம் செய்த பெருமை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கே சாரும்.

புரட்சிகர ஆயுதப் போராட்ட யுக்திகளில் கொரில்லாப் போர் முறையானது ஒரு தலைசிறந்த போர்க்கலை. உலகெங்கும் கொரில்லாப்போர்முறையானது ஒரு விடுதலைப் போராட்ட வடிவமாக வலுப்பெற்று வருகின்றது. இரண்டாவது உலகயுத்தத்தையடுத்து இதுவரை கிட்டத்தட்ட 50 நாடுகளில் கொரில்லாப்பாணியிலான ஆயுதப் புரட்சிப்போராட்டங்கள் தலைதூக்கியிருக்கின்றன.

காலனிய, ஏகாதிபத்திய சக்திகளின் அடக்குமுறையை உடைத்தெறிய கொரில்லாப் போர்முறையைக் கையாண்டு எத்தனையோ நாடுகள் வீரசுதந்திரம் பெற்றுள்ளன. சீனா, வியட்நாம், கியூபா, அல்ஜீரியா, அங்கோலா, மொசாம்பிக், கினிபோனா, சிம்பாவே, நிக்கராகுவா போன்ற நாடுகள் கொரில்லாப் போர்முறைத் திட்டத்தை கையாண்டே வெற்றிகள் ஈட்டின.

இன்று தமிழீழத்தில் மக்கள் போராட்டம் நடத்தப்போவதாக கூறுபவர்களின் குழப்பத்திற்கு பிரதான காரணம் கொரில்லாப் போராட்டம் பற்றிய விளக்கக் குறைவேயாகும். இவர்கள் இன்னும் பழைய மரபு மார்க்சீய கோட்பாடுகளில் சிறையுண்டு கிடப்பதால் நவயுகப் புரட்சிப் போராட்ட வரலாறுகளையும், அப்போராட்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட புதிய மார்க்சீய புரட்சிச் சிந்தனைகளையும் கிரகித்துக் கொண்டதாக தெரியவில்லை.

இங்கு நாம் தரவிருப்பது கொரில்லாப் போராட்டத்தை நடத்தி வெற்றி கண்ட சில புரட்சி வீரர்களின் நூல்களில் இருந்து சில அறிவுத் துளிகள் ஆகும்.

சேகுவாராவின் கொரில்லாப் போராட்டம் என்ற நூலில் இருந்து சில துளிகள்.



கியூப மக்களின் கொரில்லாப் போராட்ட வெற்றியானது ஒருவீரகாவியம் மட்டுமல்லாமல், இவ்வெற்றியானது லத்தீன் அமெரிக்க வெகுசனப் போராட்டம் பற்றிய பழைய சித்தாந்தத்தில் புரட்சிகரமான சிந்தனையையும் தூண்டிவிட்டது.

அதாவது கியூபாப்புரட்சியானது ஒரு பலம் பொருந்திய இராணுவத்துக்கு எதிரான யுத்தத்தில் வெகுசன சக்திகள் வெற்றியடைவது என்பது திண்ணம் என்றும்

ஒரு புரட்சியை மேற்கொள்வதற்கான சகல சூழ்நிலைகளும் பரிணமம் பெறும் வரை காத்திருப்பது அவசியமில்லை.

ஆயுதக் கிளர்ச்சியானது அந்தப் புரட்சிகர சூழ்நிலையைப் பிறப்பிக்கும்.

என்றும், முக்கிய பாடங்களை எமக்குப் பகர்கிறது என்கின்றார்.

இப்பாடத்தை ஒரேதாகக் கூறுவோமாயின் ஒரு பயிற்சி பெற்ற இராணுவத்திற்கு எதிராக ஒன்றுமே செய்யமுடியாது என்ற போலிச்சாக்கில் செயலற்றிருப்பது மட்டுமின்றி ஒரு புரட்சிக்கான அகப்புற, வெளிப்புற சூழ்நிலைகளைத் துரிதப்படுத்துவதை விட்டு விட்டு, அவை தாமாக, தன்னிச்சையாக உருவாகும் என்ற கற்பனையில் சும்மா கை கட்டிக்கொண்டு காத்திருப்பது மடமைத்தனம் என்பதாகும் என்கின்றார்.

6ம் பக்கம் பார்க்க

7ம் பக்கத் தொடர்ச்சி

## தமிழீழத்தில் ஒரு கெரில்லா.....

சேகுவாரா கொரில்லாப் போராட்டம் பற்றிக் கூறுகிறார். இது ஒரு மக்கள் யுத்தம், ஒரு வெகுசனப்போர். கொரில்லா அணியானது மக்களின் முன்னணிப்படை, மக்களின் ஆயுத மையக்கரு. இந்தக்கொரில்லா அணி தனது பெரும் பலத்தை மக்களிடமிருந்து பெறுகிறது. ஆட்பலம் ஆயுத பலத்தில் பின்தங்கிய நிலையில் இருந்தாற்போல ஒரு கொரில்லாஅணி எதிரி இராணுவத்தை விடபலம் குன்றியதாகக் கருதிவிடக்கூடாது. ஒரு சில ஆயுதங்களை வைத்திருப்பினும் கொரில்லா யுத்தத்தில் ஈடுபட்டு இருப்போருக்கு பக்கபலமாக பெருபான்மை மக்களின் ஆதரவு இருந்துவரும்.

சேகுவாரா ஒரு கொரில்லாப்போராளி பற்றிக் கூறுகிறார், ஒரு கொரில்லாப்போராளி என்பவன் ஒரு சமூகசீர்திருத்தவாதி. அடக்குமுறைக்கு எதிராக ஆவேசம் கொள்ளும் மக்கள் எழுச்சியால் உந்தப்பட்டே ஒரு கொரில்லாப்போராளி ஆயுதம் ஏந்துகிறான். நிராயுத பாணிகளாக நிற்கும் தனது சகோதரர்களை இழிவு நிலைக்கும், அவலநிலைக்கும் ஆளாக்கி வைத்திருக்கும் சமுதாய அமைப்பை மாற்றுவதற்காகவே ஒரு கொரில்லாப்போராளி போராடுகின்றான். ஒரு காலகட்டத்தில் மக்களை நசுக்கி வைத்திருக்கும் ஆட்சியமைப்புகளுக்கு எதிராக ஆயுதமேந்தும் அவன், இவ்வமைப்புக்களை அடியோடு மாற்றும் இலட்சியத்தில் ஆற்றல்விசையுடன் தன்னை அர்பணிக்கின்றான்.

மேலும் கொரில்லா அணியின் கண்ணோட்டத்திலிருந்து சரியான போர்முறைத்திட்டத்தை வரித்துக் கொள்வதாயின் எதிரியின் நோக்கம், செயல் திட்டம்என்ன என்பதை ஆளமாக அலசிக் கொள்வது அவசியம்.

எதிரியின் இராணுவத்தை தோற்கடிப்பதே எமது இறுதி இலக்கு என்பதை மனதில் நினைவு கொண்டு இந்த ஆய்வுகளின் அடிப்படையில் எமது போர்முறைத்திட்டத்தை நாம் தெளிவுபடுத்திக்கொள்ளவேண்டும்.


இந்தக்கொரில்லா போராட்டமானது அதாவது எதிரியை தாக்குவதும், தப்பித்துக்கொள்வதும் நாளாந்த நடவடிக்கைகளாக மாறும் பட்சத்தில் போராட்டம் இலகுவான கைங்கரியமாகிவிடும். எதிரி அணுகமுடியாதநிலையில்தம்மை போராளிகள் நிலைப்படுத்திக்கொண்டபின் கொரில்லா வீரர்கள் எதிரியைப் படிப்படியாக பலவீனப்படுத்தும் போர் முறையை கையாளவேண்டும். இத்தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடாத்தப்படவேண்டும். போராட்ப்பிரதேசத்திலுள்ள எதிரியை தாங்கவிடக்கூடாது. அவர்களது தளங்கள் தொடர்ச்சியாகத்தாக்கப்பட்டு அழிக்கப்படவேண்டும். வட்டவடிவில் சதா சூழப்பட்டிருப்பதாக எண்ணி அவர்கள் பீதி அடையும் நிலையை உருவாக்க வேண்டும்.

நிகழ்கால, எதிர்கால போர் நடவடிக்கைகளைத் திட்டமிடும் அதேவேளை, வெகுசன பிரச்சார வேலைகளையும் தீவிரப்படுத்தல் வேண்டும். புரட்சியின் நோக்குகள், இறுதி இலக்குகள் என்ன என்பதை விளக்குவதுடன் மக்களை எதிரி வெற்றிகொள்வது என்பது ஒரு போதும் முடியாத காரியம் என்ற மறுக்கமுடியாத உண்மையையும் மக்களுக்கு புகட்டிவரவேண்டும்.

இந்த பொதுசன அரசியல்வேலைகள் இரகசியமாகசெய்வதையே நோக்கமாக கொண்டிருக்க வேண்டும். காண்பதையோ, கேட்பதையோ எவருக்கும் வெளியிடக்கூடாது என போராட்டம் நிகழும் சமூக சூழலிலுள்ள ஒவ்வொருவருக்கும் எடுத்துரைக்கவேண்டும்.

கொரில்லாப்போர் யுக்திகள் பற்றி இப்படிக்கூறுகிறார் சேகுவாரா. கொரில்லா அணியில் ஆட்பலம் குறைந்திருப்பதால் எதிர்பாராத திடீர்தாக்குதலை மேற்கொள்ளும் அவசியம் கொரில்லாக்களுக்கு ஏற்படுகின்றது. இந்த உபாயத்தின் பெரும் அனுகூலம் என்னவென்றால் தமக்கு உயிர்ச்சேதம் ஏற்படாத வகையில் எதிரிக்கு பெரும் உயிர்ச்சேதத்தை விளைவிக்கும் வாய்ப்பு கொரில்லா வீரர்களுக்கு கிட்டுகிறது. அத்துடன் எதிரியின் ஆயுதத்தையும் கைப்பற்றிக்கொள்ள கொரில்லாக்களுக்கு வாய்ப்புக்கிட்டுகின்றது. கொரில்லாக்கள் பெருந்தொகையான ஆயுதத்தை எதிரியிடமிருந்தே பெற்றுக் கொள்கின்றார்கள்.

அடுத்ததாக ரெஜிடெப்ரே யின் "புரட்சியில் புரட்சி" என்ற நூலிருந்து சில துளிகள்.



இவர் கூறுகிறார் 1917இல் ருசியப்புரட்சியின் மூலவடிவம் வெகுசன ஆயுதக்கிளர்ச்சி ஆக அமைந்தது. இந்த ஆயுதக்கிளர்ச்சியை அடிப்படையாகக்கொண்டே லெனின், ஸ்டாலின் போன்றோர் சித்தாந்த கோட்பாடுகளை நெறிப்படுத்தினர்கள். மத்திய அரசு மீது உடனடியான தாக்குதலைக் குறிக்கும் வெகுசன ஆயுதக் கிளர்ச்சிக்கும், அது தோற்றம் கொள்ளும் நிலைமைகள் பற்றி விளக்கும் இக் கோட்பாடுகளுக்கும். இன்றைய சூழ்நிலைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அதாவதுசோவியத் மாதிரியான வெகுசன ஆயுதக் கிளர்ச்சி, காலனித்துவத்துக்கு உட்படுத்தப்பட்ட ஆசிய கண்டத்தில் வெற்றி பெறாது என்பது இன்று தெட்டத் தெளிவாகியுள்ளது.

9ம் பக்கம் பார்க்க

**இரத்தம் + வியர்வை + கண்ணீர் = தமிழீழ நாட்டின் விடுதலை.**

www.padippakam.com



8ம் பக்கத் தொடர்ச்சி

## தமிழீழத்தில் ஒரு கொரில்லா .....

ஒரு முதலாளித்துவ அரசின் அதிகார அமைப்பை தகர்த்தெறிவதும், அமெரிக்க உதவியால் சதா வளவூட்டப்படும் இராணுவம் எனப்படும் அதன் முதுகெலும்பை முறிப்பது என்பது சாத்தியமாவது, ஒரு நாட்டுப்புற சூழலில் நன்கு தெரிவு செய்யப்பட்ட பிராந்தியங்களில் அமைந்த கொரில்லாப் போராட்டத்தின் வாயிலாக படிப்படியாக கட்டி எழுப்பப்பட்ட ஒரு கொரில்லாப் படை மூலமே ஆகும் என்கின்றார். இந்தக் கொரில்லாப் படை போர்க்களத்திறனும், அசைந்து இயங்கும் ஆற்றலும் கொண்டது, இதமக்கள் இராணுவத்தின் கருவூலமாக எதிர்காலத்தில் உருவாகப்போகும் சோசலிச அரசின் மையக் கருவாக அமைந்திருத்தால் அவசியம் எனவும் கூறுகின்றார்.

இவர் ஆயுதப் போராட்டமும் பிரச்சாரமும் பற்றி கூறுகின்றார். இப்படி

கொரில்லாப் போராட்டமானது அரசியல் நோக்கங்களையும் இலட்சியங்களையும் கொண்டது. இதனால் இப்போராட்டத்திற்கு வெகுசன ஆதரவு அடிப்படையாவசியமாகின்றது. நேரடியாக மக்களின் ஆதரவைத்திரட்டுவதற்கு முன்பாக ஆயுதப் போராட்டத்தின் அவசியம் தர்க்க ரீதியான காரணங்களுடன் மக்களுக்கு எடுத்து விளக்கப்படவேண்டும். உள்ளூர் இராணுவ ஆட்சியினதும், ஏகாதிபத்தியத்தினதும் கட்டுப்பாடும், விழிப்பும் இன்று கிராமப்புறங்களில் மிகவும் தீவிரமாக நிலைகொண்டு வருகின்றது. இந்த நிலையில் ஆயுதப்போராட்டப்பிரச்சாரக்குழுக்கள் வெளிப்படையாக இயங்குவது என்பது இலகுவானது அல்ல. கொரில்லா வீரர்கள் கூட இந்த சூழலில் அந்நியர்கள் போல அந்தஸ்து எதுவுமின்றியே நடமாட வேண்டியிருக்கின்றது. ஆகவே ஆரம்பத்தில் கொரில்லாக்கள் மக்களுக்கு அளிக்கக்கூடியது இரத்தமும் கண்ணீருமின்றி வேறென்றுமல்ல.

இடையில் ஒரு கவி

" வியர்வை சிந்தி,
இரத்தம் சிந்தி
தாங்கொணாத்
துன்பத்தின் பரிசாகப்
பெறுவதுதான்
சுதந்திரம். "

எதிரிப்படையை ஒளிந்திருந்து தாக்கிச்சிதறடிக்கும் ஒரு சம்பவமானது அப்பகுதி கிராம மக்களுக்கு என்றுமில்லாத கிளர்ச்சியார்வத்தை உண்டு பண்ணிவிடுகின்றது. இப்படியான ஒரு இராணுவ நடவடிக்கை புதிய அங்கத்தவர்களை கவர்வது ஒரு புறமிருக்க கிராம வாசிகளுக்கும் ஒரு ஆழமான அரசியல் பாடத்தையும் புகட்டி விடுகின்றது. துருப்புக்களை ஏற்றிச் செல்லும் ஒரு இராணுவ வாகனத்தை அழிப்பது அல்லது சித்திரவதையில் பெயர் பெற்ற ஒரு பொலிஸ் அதிகாரிக்கு மரண தண்டனை அளிப்பது போன்ற ஒரு நடவடிக்கையானது ஆயிரம் சொற்பொழிவுகளை விட அதிக வலிமை வாய்ந்த பிரச்சாரமாக அமைந்து விடுகின்றது. அத்துடன் எதிரியை வெற்றிகொள்ள முடியும் என்பதில் கிராமவாசிகளுக்கு நம்பிக்கையையும் ஊட்டிவிடுகின்றது.

அதற்குப்பின்னர் சொற்பொழிவுகளை நிகழ்த்தினால் மக்கள் செவிமடுப்பார்கள் என்பது திண்ணம். அதாவது ஆயுதப்போராட்ட நடவடிக்கைகளை அடுத்தே அரசியல் பிரச்சாரம் மேற்கொள்ளப்படவேண்டுமே தவிர அவற்றிற்கு முன்பாக அல்ல. ஆயுதப் போராட்டத்திற்கு புறம்பான ஒரு கட்டமாக அல்லது அவற்றிற்கு முன்னோடியாக அரசியற் பிரச்சாரத்தை மேற்கொள்வது என்பது எதிரியை விழிப்படையச் செய்வதுடன் பிரச்சாரத்தில் ஈடுபடும் தோழர்களை அழிவுப்பாதையில் இட்டுச் சென்று கொரில்லா நடவடிக்கைகளுக்குச் சாதகமான பகுதிகளையும் அம்பலப்படுத்துவதாகவும் முடியும். எதிரி அரசியல் பிரச்சாரத் தொண்டர்களைத் தொடர்ந்து வந்து இரகசியத் தளங்களையே நாசமாக்கும் சாத்தியமும் உண்டாகும்.

உதாரணமாக ஆயுதப்போராட்ட நடவடிக்கைகளின் பின்பு அரசியல் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டால் ஆயுதப்போராட்ட நடவடிக்கைகளால் பீதியுற்றிருக்கும் எதிரி இராணுவம் பிரச்சாரத் தொண்டர்களை தொடர்ந்து வருவது என்பது சாத்தியமில்லை.

## ஒரு படு கொதியனின் பயங்கரக் குமுறல்

தூப்பற் சட்டிகளே ! -- நீங்கள்
தூரப் போய் நில்லுங்கள் !
உப்பும் வட்டியிலே -- உங்கள்
ஊருக்குள் வளவுகளை வாங்குங்கள் !
அப்பன் பேரிற் சீர்வரிசை சேருங்கள் !
அடுக்கடுக்காய் மாடி வீடு கட்டுங்கள் !
கப்பலேறி கால் பிடித்து வாழுங்கள் !
கண்ணை மூடி கதியே என்று சாகுங்கள் !

பிறந்த மண்ணும் உறவும் இங்கே அழியட்டும் !
மறந்து அங்கே மயக்கம் கொண்டு வாழுங்கள் !
வருந்துவீர்கள் ; முதுமை வந்து சேரட்டும் !
பிறந்த மண்ணின் வசந்தம் செத்துப் போகட்டும் !

மாற்றி மாற்றி உடையுடுக்கும் மயிலக்கா !
ஆட்டியாட்டி நகைகள் நல்லா அணியக்கா !
நேற்று வரை உனது மூச்சி அழகக்கா !
இன்று மட்டும் உன்னைப்பார்த்தா வேடிக்கைக்கா !

நாட்டிலங்கு தந்தை தாயார் பட்டினி !
வீட்டிலுள்ள தம்பி தங்கை கட்டிலில் !
வேட்டுச்சத்தம் எங்கும் ரத்தம் நாட்டினில் !
ஆட்டியாட்டி நடக்கிறாயே மயிலக்கா !

உனது கையால் சோறு உண்டால் பாவமாம் !
நெஞ்சனக்குப் பாலும் நஞ்சோ சொல்லக்கா !
எமது தாய்மண் சாகும்போதும் -- பகட்டினில்
வாழுமுன்னைப் பெற்ற தாய்க்குச் சாபமாம் !

பங்கயமழான்

----------

www.padippakam.com





# மக்களோடு புலிகள்

**அதிகரித்து வரும் நெருக்கடியில் தமிழ் மக்கள் பேணக் கூடிய வளங்களும் வாய்ப்புகளும் - உணவு:-**

மேற் கூறப்பட்ட இன ஒழிப்பு நடவடிக்கைகளில் இருந்தும் அரசியல், பொருளாதார, கலாச்சார ரீதியான ஒடுக்குமுறைகளில் இருந்தும் மீட்சி பெறும் நோக்கத்துடன் தமிழ் தேசிய இனமானது தமக்கென ஓர் அரசை நிறுவும் பணியில் போராட்டத்தைத் தொடங்கியுள்ளது. இப் போராட்டமானது பல கெடுபிடிகளின் மத்தியிலும் பல மீட்க முடியாத இழப்புகளின் மத்தியிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப் போராட்டத்தின் இறுதியில் நாம் ஓர் அரசை நிர்மாணிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். உலகில் காலனித்துவத்திற்கு எதிராகக் குடியேற்ற நாடுகள் தமது தேசிய விடுதலைப் போராட்டத்தினை மேற்கொண்ட போது தமது மண்ணில் இருந்த அரசின் அதிகாரம் வெளிநாட்டவரிடம் இருப்பதைப் பறித்துக் கொள்வதற்காகப் போராடினர். ரஷ்யா, சீனு, கியூபா போன்ற புரட்சி நடைபெற்ற நாடுகளிலும் பிற்போக்காளரிடம் இருந்த அரச அதிகாரத்தைப் புரட்சியாளர்கள் கைப்பற்றுவதற்காகவும் அதன் மூலம் அரசமைப்பு முறையை மாற்றுவதற்கானதுமான போராட்டமே நடந்தது. ஆனுல் இவ் இரண்டு வகைப் போராட்டங்களிலும், ஏற்கனவே அமைக்கப்பட்ட அரசு ஒன்று இருந்தது. ஆனுல் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை தொடங்கியுள்ள எமது நோக்கமானது அதைவிடக் கடினமானதாகும். நாம் பலாத்காரமாக இணைக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா அரசில் இருந்து பிரிந்து புதிதாக சகல இறைமையும் பொருந்திய ஓர் அரசொன்றை அமைப்பதற்காகப் போராடுகின்றோம் அரசு என்பது பல பரிமாணங்களைக் கொண்டதாகும். இப்பல பரிமாணங்களையும் பெறுவதற்கான அடிப்படையை நாம் நிர்மாணிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் எமது இயக்கமானது இதற்கான பரிமாணங்களைக் கொண்டு வளர்ந்து வருகின்றது. போராட்டமானது, வெகுவேகமாக வளர்ந்துவரும் இவ்வேளையில் புதிய சோஷலிச அரசிற்கான நிர்மாணங்களையும் நாம் அதற்குச் சமாந்தரமாக வளர்த்தெடுத்துக் கொண்டு செல்லும் பட்சத்தில்தான் முடிவில் ஓர் பூரண இறைமையுள்ள அரசை நிர்மாணிக்க முடியும். நாம் அமைக்கப் போகும் அரசானது அரசியல், பொருளாதார மற்றும் சகலதுறைகளிலும் தன்னுதிக்கம் கொண்டதாக இருக்க வேண்டும். இன்று மூன்றும் உலக நாடுகள் சில அடைந்துள்ள சுதந்திரம் போன்று. ஓர் தேசியக் கொடியும், தேசிய கீதமும் மட்டுமே எமது அரசாக இருக்கக் கூடாது. இன்றுவரை பலவகையில் ஒடுக்கப்பட்டு வந்த நாம் எமது சுய முயற்சியாலும் தன்னம்பிக்கையாலும் வளர்ச்சி அடைந்துள்ளது போல எமக்கு அரசு ஒன்றை அமைப்பதிலும் வெற்றி காணுவோம், எமது இவ்வுயர்வான இலட்சியத்தை அடைவதற்கு நாம் சிரமங்களுக்கு உட்பட வேண்டிவரும். எத்தகைய சிரமங்களின் மத்தியிலும் எமது இலட்சியமே கண்ணுகக் கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் தமது போராட்டத்தை வென்றெடுக்கவும், அதில் சுதந்திர வாழ்வைத் தொடங்குவதற்கும் முதலில் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும். இதில் முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டியது உணவாகும் எந்த ஒரு நாடோ அன்றேல் பிரதேசமோ பூரண வளங்களைக் கொண்டதாகக் காணமுடியாது. சில வளங்களில் மேலதிகமும், சிலவற்றில் பற்றுக்குறையும் காணபப்டுவது இயல்பு. ஆனுல் நெருக்கடிகள் முற்றி வரும்போது, மக்கள் தம்மைச் சூழ உள்ள வளங்களை, முழுமையான பயன்பாட்டின் கீழ் கொண்டு வருதல் அவசியமாகின்றது.

# தமிழீழ விடுதலைப் புலிகளின் குரல்

தமிழீழம் வானெலி— அலை வரிசை சிற்றலை 49 இல் தினமும் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும்.

தொலைக்காட்சி— வடமாகாணத்தில் (முன்னறிவித்த வடம்)

நெதர்லாந்து— தொலைபேசிச் சேவை
1) (070)466.121.- டெச்சாக் தமிழில் 24 மணி நேரமும்.
2) சனி, ஞாயிறு காலை 9மணியிலிருந்து மாலை 9மணிவரை டச்சு, ஆங்கிலம்.

வானெலி— ஞாயிறு இரு தடவைகள் மாலை 12மணிமுதல் 1மணி வரை. மாலை 9மணிமுதல் 10 மணி வரை.

பிரான்ஸ் - தொலைபேசிச் சேவை
1)239.58.67-பாரிஸ் 24 மணிநேரமும்.

வானெலி— ஞாயிறு, வியாழன் ஆகிய இரு நாட்களில் மாலை 7மணி முதல் 8மணி வரை. அலைவரிசை 102.7

நோர்வே- தொலைபேசிச்சேவை-இரு நகரங்களில்
1) (2)38.44.58- ஒஸ்லோ
2) (5)31.27.98- பேர்கன்
24மணி நேரமும்.

லண்டன்- தொலைபேசிச் சேவை
1) 475-0543
24 மணி நேரமும்.

ஜேர்மனி- தொலைபேசிச் சேவை
(30)396.74.77-பேர்லின்

கனடா- தொலைபேசிச் சேவை
(514)25542-04
மொன்றியல்.

"சுதந்திரத்திற்கு விலையாக எங்கள் உயிரையே கொடுக்கத் தயாராக உள்ளோம்"
— விடுதலைப் புலிகள் தலைவர்
வே. பிரபாகரன்



படிப்பகம்

www.padippakam.com



# தமிழீழத்தின் நாளாந்த நிகழ்வுகள்

1-12-85. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்லடி என்னுமிடத்தில், கல்முனை வீதியில் சிவானந்தா மகாவித்தியாலயத்திற்கு அண்மையில், பொதுமக்களைத் துன்புறுத்திக்கொண்டிருந்த இராணுவ அதிரடிப்படையினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஒன்றின்போது ஒரு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். 4 பேர் படுகாயமடைந்தனர். காயமுற்றவர்களில் மூவர் பின்பு இறந்திருக்கலாமென நம்பப்படுகின்றது. பின் வாங்கி ஓடிய இராணுவத்தினர் கல்முனை வீதியில் வசிக்கும் டாக்டர். ரகுபதி கந்தப்பரையும், சைக்கிள்கடை சுந்தரநாதனையும் சுட்டுக்கொன்றுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில்

தமிழீழ விடுதலைப்புலிகள் நடாத்திய கண்ணிவெடித் தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதைத்தொடர்ந்து களத்திற்கு விரைந்த கவச வாகனம் மீதும், ஒரு ஜீப் வண்டிமீதும் தமிழீழ விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் இவ்விருவாகனங்களும் முற்றாக சேதமாக்கப்பட்டன. விமானப்படையினரின் கெலிகொப்டர்களும், கடற்படையினரின் கப்பல்களும் இவ்விடத்தைச் சூழ்ந்து தாக்குதல் நடத்திய போதிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பதிலடிக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் பின் வாங்கியுள்ளன.

9-12-85. நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து நடந்து 50 இராணுவத்தினர் மீது விடுதலைப்புலி வீரர்கள் தாக்கியதில் 3 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் 6பேர் படுகாயமுற்றனர். விடுதலைப்புலிகளின் தரப்பில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

வவுனியாப்பகுதியில் 5 வருடகாலமாக கைவிடப்பட்டநிலையில் இருந்த அரிசி ஆலை ஒன்று அதிகாலை 5மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது. சம்பவம் நடந்த அரிசியாலையை தரிப்பிடமாகக்கொண்டு இயங்க பாதுகாப்பு பிரிவினர் ஆலோசனை செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

10-12-85 கிளிநொச்சியில் கணேசபுரம் என்னுமிடத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த தமிழ் மக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் 2தமிழர்கள் இறந்துள்ளார்கள். ஒருவர் காயமடைந்துள்ளார். மேலும் 6ஆம் வாய்க்காலில் என்னுமிடத்தில் 2 கடைகளை இராணுவத்தினர் எரித்துள்ளனர்.

கிளிநொச்சியில் கரடிப்போக்கு என்ற இடத்தை இராணுவத்தினர் சுற்றி வளைத்து தேடுதல் வேட்டை நடாத்தினர். இச்சுற்றிவளைப்பின்போது தன்னிடமிருந்த இரு கைக்குண்டுகளினால் இராணுவத்தை இறுதிவரை எதிர்த்துதப்பமுயன்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் இளம்வீரரான 17வயது நிரம்பிய 'புள்ளி' என்ற வீரவேங்கை வீரமரணமடைந்துள்ளார்.

இத்தேடுதல் வேட்டையின் பின் 7கவச வாகனங்களில் தமது முகாமிற்கு திரும்பிக்கொண்டிருந்த சிங்கள இராணுவத்தினர் மீது பிற்பகல் 4மணியளவில் உருத்திரபுரம் என்ற இடத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிரடிப்பிரிவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித்தாக்குதலில் 15 சிங்கள இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் வாகனங்கள் முற்றாக சேதமாக்கப்பட்டன. விடுதலைப்புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

13-12-85 புளொட் எனப்படும் இயக்கத்தினர் அரியாலையில் தனியார் வாகனமொன்றை பலவந்தமாக கடத்தியுள்ளனர். கடத்தப்பட்ட வாகனத்தின் சாரதி வாகனத்தைத்திருப்பி தரும்படி புளொட்டினரை அணுகியபோது அப்பாவியான சாரதி கட்டுப்பாடற்ற புளொட் இயக்கத்தினரால் கத்தியால் வெட்டப்பட்டு தாக்கப்பட்டுள்ளார். இச்சம்பவத்தை விசாரிக்கும் பொருட்டு விடுதலைப்புலிகள் புளொட்டினரை அணுகியபோது புளொட்டினர் விடுதலைப்புலிகள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். தற்பாதுகாப்பின் பொருட்டு விடுதலைப்புலிகள் சுட்டதில் 3புளொட்டினர் கொல்லப்பட்டனர்.

கொள்ளைகள், கொலைகள் போன்ற சமூக விரோதச் செயல்களைத் தடுக்க விடுதலைப்புலிகளால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு தமிழீழத்தின் சகல பகுதிகளிலும் மக்கள் அமோக ஆதரவு தந்த வண்ணமுள்ளார்கள் என்பது தெரிந்ததே.

14-12-85 திருமலையிலுள்ள கட்டைப்பறிச்சான் என்னுமிடத்தில் எமதியக்க வீரர் ஒருவரின் வீடு இராணுவத்தினருக்கு காட்டிக்கொடுக்கப்பட்டதையடுத்து இயக்க வீரரின் தாய் தந்தை மற்றும் 3 சகோதரிகளை இராணுவத்தினர் கைது செய்த போதும் 1 சகோதரி தப்பி விட்டார். ஏனையோரை இராணுவத்தினர் தமது வாகனங்களில் ஏற்றிக் கொண்டு செல்கையில் எமது விடுதலை வீரர்கள் வழியில் இராணுவத்தினரைத் தாக்கி அக்குடும்பத்தினரை மீட்டுள்ளனர். இராணுவத்தினர் மோட்டார் கொண்டு தாக்கியபோதிலும் எமது வீரர்களுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை. விடுதலைப்புலிகளின் இவ்வீரச்செயலை அக்கிராமத்து மக்கள் ஒன்று கூடிப்பாராட்டியுள்ளனர்.

15-12-85 மட்டக்களப்பில் சில கட்டிடங்கள் விடுதலைப் போராளிகளால் வெடிகுண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளன.

மொறக்கொட்டான் சேனையிலுள்ள அரச அரிசி ஆலையும், குடியிருப்புக்களும், ஆயித்தியமலையிலுள்ள சமூக கூடங்களும், விவசாய அதிகாரிகளுக்கான வசிப்பிடங்களும் விடுதலைப் போராளிகளினால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன. மேற்படி கட்டிடங்கள் யாவும் இராணுவ முகாம்களாக்க அரசு திட்டமிட்டிருந்தது தெரிந்ததே.

17-12-85

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அலம்பில் என்ற இடத்திற்கு நடந்து வந்து கொண்டிருந்த கிட்டத்தட்ட 150 இராணுவத்தினர், தமிழீழ விடுதலைப் புலிகளின் எறிகுண்டுத் தாக்குதலுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் தமது முகாமுக்கு பின்வாங்கி ஓடினர். எமது விடுதலைப் புலிகளுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை.

வவுனியாவில் உள்ள ப.நோ.கூ சங்கம் ஒன்றினைக் கொள்ளையடிக்கச் சென்ற, தாம் மக்கள்இயக்கம் எனத் தாமே கூறிக்கொள்ளும் ஒரு இயக்கம் மக்களால் துரத்தப்பட்டபோது ஒருவர் பிடிபட்டார். மறுநாளும் மீண்டும் திரும்பி வந்த அதேஇயக்கத்தினர் தாம் விசாரிப்பதாகக் கூறி மக்களிடமிருந்து அவரை மீட்டுச்சென்றனர்.

மட்டக்களப்பிலுள்ள புல்லுமலை என்ற இடத்திலுள்ள வைத்தியசாலை ஒன்று சிங்கள இராணுவத்தினால் கைப்பற்றப்பட்டு இராணுவமுகாமாக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இனவாத சிங்களஅரசின் ஆயுதப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட வெறியாட்டச் செயல்கள் பெருமளவிலான படையெடுப்பு ஒன்றிற்குரிய ஆரம்பமுயற்சிகளேயாகும் என அவதானிகள் கூறுகின்றனர்.

19-12-85

வவுனியாவிலுள்ள மொத்தம் 13 அகதிகள் முகாம்களில் சுமார் 4,000 அகதிகள் உள்ளனர். இம் முகாம்களை மூடி அதிலுள்ள அனைவரையும் வவுனியா நகர்பகுதிகளில் குடியமர்த்த வவுனியாமாவட்ட பாதுகாப்பு இணைப்திகாரி முயற்சிசெய்து வருவதாக அறியப்படுகிறது.

20-12-85

தொண்டமனாறு இராணுவமுகாமிலிருந்து 15 யார் தொலைவிலுள்ள காவற்கம்பத்திலுள்ள விளக்கை மாற்றுவதற்கு வந்த 15 சிங்கள இராணுவத்தினர்மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிரடிப்படை ஒன்று மேற்கொண்ட தாக்குதலில் 6 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இராணுவ அதிகாரி உட்பட ஏனையோர் முகாமிற்குள் ஓடி ஒழிந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் அரியாலைப்பகுதியில் உள்ள எமது முகாமொன்று மக்கள் போராட்டம் நடத்தப்போவதாகக் கூறிக்கொண்டிருக்கும் ஒரு இயக்கத் துரோகிகளினால் காட்டிக்கொடுக்கப்பட்டு சிறிலங்கா இராணுவத்தினால் சுற்றிவளைக்கப்பட்டது. வீரத்துடன் போராடிய எமது வீரர்கள் இராணுவத்தினரின் முற்றுகையை உடைத்துத் தப்பியபோதிலும் 'கார்த்திக்' என அழைக்கப்படும் இளம் வீரவேங்கை ஒருவன் வீரமரணம் அடைந்தான்.

பாரிய இயந்திரத்துப்பாக்கிகள், றொக்கட் லோஞ்சர்கள் போன்ற நவீனரக ஆயுதங்களுடன் 200க்கு மேற்பட்ட இராணுவத்தினர் பொலிகண்டி என்ற இடத்தைச் சுற்றிவளைத்த பொழுது அப்பகுதியில் முகாமிட்டிருந்த எமது இயக்க வீரர்கள் இவர்களை எதிர்த்துத்தாக்கி அவ் முற்றுகையினின்றும் தப்பிவிட்டனர். எம்மவர்க்கு எதுவிதசேதமும் ஏற்படவில்லை.

21-12-85 தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட எதிர்தாக்குதல்களினால் ஆத்திரமடைந்த நூற்றுக்கணக்கான சிங்கள இராணுவத்தினர் மானிப்பாய்ப்பகுதியைச் சுற்றி வளைத்தனர். இவ்விடத்திலேயே எமது பொதுமக்களிற்கான அலுவலகம் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சிங்கள இராணுவத்தின் அதிரடிப்படையொன்று ஆயுதம் தாங்கிய 4 கெலிகொப்டர்களிலிருந்து தாக்குதலைத் தொடங்கினர். சூழ்நிலை எமது வீரர்களுக்கு சாதகமாக இல்லாதிருந்த போதும் எமது வீரர்கள் இராணுவத்தினர்மீது மூர்க்கத்தனமாக எதிர்த்தாக்குதலை நடத்தினர்.

படிப்பகம்

www.padippakam.com



11ம் பக்கத் தொடர்ச்சி

## தமிழீழத்தின் நாளாந்த.....

இத்தாக்குதல் நான்கு மணித்தியாலங்கள் தொடர்ந்து நடந்தது. கெலிகொப்டர்களாலும் றொக்கற்லோஞ்சர், மோட்டார்கள், பீரங்கிகள் போன்ற ஆயுதங்களைக் கொண்டு தாக்குதலை மேற்கொண்ட சிங்கள இராணுவத்தினால் எமது அலுவலகத்தினை நெருங்கக்கூட முடியவில்லை. இந்நிலையில் இறந்தவர்களின் உடல்களைத் தூக்கிப்போட்டுக்கொண்டும் காயப்பட்டவர்களுடனும் இராணுவத்தினர் பின்வாங்கிவிட்டனர். இம் மோதலின்போது எமது அலுவலகக்கட்டிடத்தில் சிறு சேதம் ஏற்பட்டது.

எமது மண்ணிலேயே எம்மை முற்றுகையிட முயன்ற அந்த சிங்கள இராணுவத்தை முன்னணியில் நின்று எதிர்த்துப் போராடிய அல்பேட் என அழைக்கப்படும் எமதியக்க மூத்த வீரரொருவர் வீரமரணமடைந்தார்.

இவ் வெற்றிகரமான தாக்குதல் தமிழ் மக்களிடையே ஒரு புதுவித உற்சாகம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

23-12-85 அதிகாலை 5 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் திரு.பாலசிங்கம் அவர்களின் சென்னை வீட்டில் அதிசக்தி வாய்ந்த ரி.என்.ரி வெடிகுண்டு வெடித்தது. அவரது படுக்கையறைக்கு மேலுள்ள மொட்டைமாடியில் வைக்கப்பட்ட இவ்வெடிகுண்டினால் மொட்டை மாடிக்கும், அயலிலுள்ள வீட்டு யன்னல்களுக்கும் சேதமேற்பட்டுள்ளது. உயிர்சேதமோ, எவருக்கும் காயமோ ஏற்படவில்லை. இது சம்பந்தமாக இந்திய உளவுப்படையினரால் 5 வெளிநாட்டவர் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

28-12-85 தள்ளாடி இராணுவமுகாமிலிருந்து ஏராளமான சிங்கள இராணுவத்தினர் பல கவசவாகனங்களிலும் ஜீப் வண்டிகளிலும், கெலிகொப்டர்களால் பாதுகாப்பளிக்கப்பட்ட நிலையில் ரோந்து வந்துகொண்டிருந்த போது விடுதலைப்புலி வீரர்கள் (அதிரடிப்படை வீரர்கள்) கண்ணிவெடி, றொக்கற் போன்றவற்றினைக்கொண்டு தாக்கினார்கள். காலை 7 மணிமுதல் மாலை 3 மணி வரை நீடித்த இத் தாக்குதலில் 3 இராணுவ வாகனங்கள் முற்றுகச் சேதப்படுத்தப்பட்டதுடன் 16 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத் தாக்குதலால் நிலைகுலைந்த இராணுவத்தினர் பின்வாங்கி தள்ளாடி முகாமிற்குள் ஓடிவிட்டனர்.


விடுதலைப் புலிகளின் இந்த வெற்றிகரமான தாக்குதலால் அப்பகுதிமக்கள் ஒரு புதுவித உட்சாகமடைந்துள்ளார்கள்

ஆள்காட்டிமன் என்ற இடத்தில் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் ஒரு இராணுவ வாகனம் முற்றுகச்சேதமாக்கப் பட்டுள்ளதுடன் 7 சிங்கள இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

பரப்புகடந்தான் என்ற இடத்தில் சிங்கள இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட றொக்கற் தாக்குதலில் இரு இராணுவ வாகனங்கள் முற்றுகத் தகர்க்கப்பட்டன. 7 சிங்கள இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

வவுனிக்குளம் என்ற இடத்தில் வானத்தில் நின்று குண்டுகளை வீசிக்கொண்டிருந்த கெலிகொப்டர்கள் மீது விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட றொக்கற் தாக்குதல்களுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் தங்களது முகாம்களுக்கு பின்வாங்கி விட்டனர்.

29-12-85 கொக்காவில், ஆனையிறவு ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து 5 கவசவாகனங்கள், 1 பாரம் தூக்கும் கருவி 1 ராக்டர், 1 ஜீப் போன்ற வாகனங்களில் வந்த சுமார் 250 சிங்கள இராணுவத்தினர் வட்டக்கச்சி என்ற இடத்தைச் சுற்றிவளைத்தபோது எம்மவரான அன்சார் என்பவர் இரு கைக்குண்டுகளை எறிந்து அவர்களைத் தாக்கிவிட்டு ஓடினார். அப்போது இராணுவத்தினர் செய்த துப்பாக்கிப் பிரயோகத்தினால் விடுதலைப் புலி வீரர் அன்சார் வீரமரணம் அடைந்துள்ளார். மேலும் அவ்விடத்தில் கைதுசெய்யப்பட்ட மூவரால் எமது ஆதரவாளர்கள் வீடுகள் காட்டிக்கொடுக்கப் பட்டதால் 3 வீடுகளும் ஒரு சவர்க்காரத் தொழிற்சாலையும் சிங்கள இராணுவத்தினால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன.



## கொடுங்கோலன் ஜெயவர்த்தனேயின் ரத்தப்பசிக்குப் பலியாகிவரும் தமிழர்கள் ஆயிரமாயிரம் பேர்.

## அவர்களில் கொடுஞ்சித்திரவதையில் கொல்லப்பட்டோர் பலர் நெஞ்சைப் பிளக்கும் அக்கொடூர பிணங்களில் சில இதோ ....



### கீழ் வானம் சிவக்கும்
****************

பத்துக்கிழமை உணவற்ற, பாவை இவளுடலில்- (தாய்)
பாலெப்படி வரும் பாலகன் குடிப்பதற்கு
கத்துகிறுன் பாலகன் கதறுகிறுன் தாயைநோக்கி-பாவம்
கதைக்கவே வலுவற்ற பாரிகை என்செய்வாள்
வேலைக்கு வேகமாய் போனுன் இவள்கணவன்-எய்பத்திமூன்றில்
வேங்கையென்று வெடியுண்டான், இராணுவத்தால்
காலைகள் வந்தாலும் கண்ணீர் மாலைகள்மாறுது-இவளைக்
காரணம் கேட்டென்ன ஆதரவு யார்தருவார் ?

குடிகளுக்கோ உலகில் ஒரேயொரு ஆதவன் - இவள்
குடிலுக்கோ ஆயிரம் , ஐயிரம் ஆதவன்கள்
படிதாண்டிப் போனுல் பாவி என்பார்கள் - ஆனுல் இவள்
பாலனுக்குப் பால் எவரேனும் கொடுத்தாரோ
நகைக்கும் உலகம் நாளும் சொல்லும் - எம்
நங்கை இவள் தமிழிச்சி ஆனதால்
திகைக்கும் இவள் வாழ்வைச் சீர்தூக்கி - சீர்
திருத்த அவனியில் யார் வருவார் ?

13ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



## குழப்பமா? தயக்கமா?

எத்தனை வருடங்கள் அடிமைகளாய் வாழ்கின்றோம்
இத்தனை காலமும் நாம் அதை உணர்ந்தோமா?
இவ்வளவு நடந்த பின்பும் குழப்பம் தான் எம் மனதில்
வருங்கால சந்ததிக்கு கஷ்டமான காலம் இங்கே
வெள்ளையரின் வெறுப்பு எங்கள் பிள்ளைகளை தாக்கும்
வெள்ளையரின் கலாச்சாரம் எங்கள் பிள்ளைகளை அமுக்கும்
வெள்ளையரின் இரத்தம் எம் சந்ததியில் கலக்கும்
பின் என்ன நாளை எம் சந்ததியே வெள்ளைதான்
இந்த முடிவினை தெரிந்தவர்கள் பயப்படத் தேவையில்லை

நாங்கள் தான் தமிழர்கள் எமக்குத்தான் தமிழீழம்
போராட்ட வெற்றி தோல்வி எங்களின் கையிலேதான்
இங்கிருந்து கொண்டு நாம் சுட்டு வீழ்த்திவிட முடியாது
போராட்டம் இலங்கையிலே நாம் அதில் தப்பி விட்டோம்
என்று மனமிழந்து நாம் சிந்திக்கக் கூடாது
இயக்கத்தில் எத்தனைபேர்? ஆயுதபலம் எப்படி? தமிழ் ஈழம் எப்போது?
இதற்கான பதில்களெல்லாம் நம் மக்கள் உழைப்பில்தான்
கேள்விகள் கேட்பதுடன் சோர்ந்து விடலாகாது

இயக்கங்கள் பலதான் அப்படி ஏன் நடந்தது?
இயக்கங்களின் குறிக்கோள் சமதர்ம தமிழீழம்
ஆயுத முனையிலே விடுதலைப்போர், ஆனாலும்
பாதைகள் மாறியதால் பிரிவுகள் வந்ததைதான்
இதனை நாம் தெளிந்து கொண்டு,
விடுதலைப் புலிகளை பலமாக வளர்த்திடலாம்
அப்படி இல்லாமல் நொண்டி சாட்டுகள் சொல்லிக் கொண்டு
உதவி செய்ய மறுப்பவர்கள்
வாயினை வைத்துக் கொண்டு குழப்பாமல் இருக்கட்டும்
அவர்கள் காலம் கடந்த பின்பு சிந்திக்கப் போகிறார்கள்
சரியான பாதையிலே தவறாமல் சிந்திப்போம்
சிந்தனைக்கு அடுத்தபடி தீவிரத்தை சேர்ப்போம் நாம்!

-- ஜோதி --
(நோர்வே)

---

## பாரதப் பிரதமர் ரஜீவ் காந்தி இலங்கையில் நடக்கும் இனப்படுகொலைகளை வன்மையாகக் கண்டித்துள்ளார்

*******************



பாரதப் பிரதமர் ரஜீவ் காந்தி, விடுதலைப் புலிகள் மீது நடவடிக்கை என்று கூறி தமிழர்களைக் கொன்று குவிப்பது ஏன் எனவும், தமிழினப் படுகொலைகளை உடனடியாக நிறுத்து எனவும் இலங்கையை வன்மையாகக் கண்டித்துள்ளார். இலங்கையில் தமிழினப் படுகொலை காரணமாக தமிழ் நாட்டிற்கு ஓடிவந்திருக்கும் தமிழர்கள் மீண்டும் பயமின்றி கௌரவத்துடன் நாடுதிரும்பும் நிலை ஏற்படும்வரை சாஸ்திரி, ஸ்ரீமா உடன்படிக்கையின்படி 84 ஆயிரம் தமிழர்களைத் தாம் திருப்பி அழைக்கப் போவதில்லை என்று ரஜீவ் காந்தி கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

அத்துடன் இலங்கையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இடம்பெறுகின்ற தமிழினப்படுகொலைகளுக்கு ஆழ்ந்த கவலையையும் தெரிவித்ததோடு, தமிழகத்திலும் இந்தியாவின் ஏனையபகுதிகளிலும் கூட இவ் இனப்படுகொலைகள் கவலையைத் தோற்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பயங்கரவாதிகள் மீது நடவடிக்கை எடுப்பதை தான் ஆட்சேபிக்கவில்லை எனவும் ஆனால் இவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாகக் கூறி நிரபராதிகளை அப்பாவிகளை அவர்கள் ஓர் குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள், ஓர் குறிப்பிட்ட மொழியைப் பேசுபவர்கள் என்பதற்காக அவர்களைக் கொலைசெய்வது சரியல்ல என்றும், அரசியல் பிரச்சனைகளை இராணுவப் பலம் மூலம் தீர்த்துக் கொள்வதில் தமக்கு நம்பிக்கை இல்லை என்றும் நாம் இலங்கையின் மேல்மட்ட அளவில் தெளிவாகக் கூறியுள்ளோம் எனவும் தெரிவித்திருந்தார்.

---

12ம் பக்கத் தொடர்ச்சி

வருகிறது வெடியோசை வானைப் பிளந்துகொண்டு – இங்கே
வஞ்சியர் கத்தல்கள் வானைத் தொடுகிறது
தருகிறது கலக்கம் தரணி அதிரவே – இராணுவம்
தாயென்றும் தங்கையென்றும் தயவு பார்த்ததுண்டோ

நெருங்கியது வெடியோசை இவள் குடல்நோக்கி – இரவையால்
நொருங்கியது இவள் மேல்மார்பு ஒருநொடியில்
அருந்திடும் பாலகன் அமுதென்று உதிரத்தை – தமிழ்த்தாய்
அழிந்து போகையிலும் இரத்தப்பால் கொடுப்பாளே.

மீண்டும் வெடியோசை மீளக் கேட்கிறது – அன்னையை
மீட்டிட, புலிகளின் வெடியோசை தொடர்கிறது
வேண்டிய தாயை வேகமாய் மீட்கவே – தமிழ்
வேங்கைகள் ரவையால் கீழ்வானம் சிவக்கிறது.

நக்கீரன் (நோர்வே)





குறிப்பு – இங்கு குறிப்பிடும் பெண்ணை தமிழ்த் தாயாகவும் குழந்தையை தமிழீழத்தின் இளம் சந்ததியாகவும் கொள்ளவும்.

www.padippakam.com





லெப். நற்குணம் (ஜங்கரன்)   கிருஷ்ணநந்தம் (கடாபி)   லெப். சுதாகர் (நிதி)

முதலாண்டு நினைவஞ்சலி

18.12.85

********

நீங்கள் அன்று சிந்திய குருதி
அன்றே காய்ந்து விட்டது.
ஆனால், இன்றும் அம்மண்
செந்நிறமே தான்.
உங்கள் உடல்கள்
அன்றே குளிர்ந்து விட்டன.
ஆனால், இன்றும்
உங்கள் துப்பாக்கிகள்
கனன்று கொண்டேயுள்ளன.

- புலிகளின் தாகம்
தமிழீழ தாயகம் -



லெப். ஸ்ரீஸ்கந்தராஜா
(காண்டீபன்)
24.12.85 (முதலாண்டு)

நினைவஞ்சலி

*******

உங்கள் வீர மரணம் - எங்கள்
நீண்ட பயணத்தில் நிலையான படிகள்.



ந. கலையரசு   ந. விஜயேந்திரன்   க. சுலோகநாதன்
க. இரவீந்திரன்   விக்னேஸ்வரன்   வெள்ளை
பொ. டன்பொஸ்கோ   க. விக்னேஸ்வரன்

## எமக்குத் தேவை சுதந்திரத் தமிழீழமே

**************************

ஆம்! தமிழீழ மக்களாகிய நாம் வேண்டுவது பயமின்றி, கௌரவமாக ஒரு தமிழீழத் தனியரசை அமைத்து வாழ வேண்டுமென்பதே!

அதை விடுத்து மாவட்டசபையும், மாநிலசுயாட்சியும் என்ற பூச்சாண்டித் தீர்மானங்களை எடுத்து வர நாம் உங்களை பாராளுமன்றம் அனுப்பவில்லை. அது மட்டுமல்லாமல் வெளிநாடுகளில், தமிழ் மக்கள் ஒரு மாற்றுத் தீர்வுக்கு ஆயத்தமாக வேண்டும் என்று தமிழ் மக்களைக் குழப்பிக் கொண்டும் இருக்கும் நீங்கள் எங்களை ஏமாற்றுவது புரியவில்லையா? இல்லை புரிந்தும் நாடகமாடுகின்றீர்களா?

எமக்காக, உயிர் நீத்த வீரவேங்கைகள்தான் எத்தனை! எத்தனை அப்பாவித்தமிழ்மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டனர்! எத்தனை பெண்கள் மானமிழந்தனர். இத்தனைக்குப்பிறகும் நீங்கள் கை நீட்டுவது இந்தச் சிறு ஏமாற்றுவித்தையான தீர்மானத்திற்காகவா? நாம் விழித்துவிட்டோம். நெடுந்தூரம் செல்ல வேண்டும், வர முடியாதோர் பயணத்தை மறிக்க வேண்டாம் ஓய்வெடுக்கட்டும்-ஒதுங்கட்டும், நடக்கமுடியாதவர்கள்-இருக்கட்டும்-இடைஞ்சலாக வேண்டாம்.

இவ்வுணர்வை, பெட்டோல்ட் பிரெஸ்ட் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசைச் சேர்ந்த பாட்டாளி வர்க்க இலக்கிய மேதை தனது இந்தப்பாடலில் தெளிவாக தெளிவுபடுத்தியுள்ளார்.

15ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

14ம் பக்கத் தொடர்ச்சி
எமக்குத் தேவை ....

எமது ஆடை
கிழிந்து நைந்திடும்
ஒவ்வொரு சமயத்திலும்
ஓடிவந்து நீ சொல்வதென்ன?
'இனி இது உதவாது' என்பதுதானே!
இதோ இந்தக் கணமே
அதை சரி செய்யவேண்டும்
நமது சக்தி முழுவதையும்
நாம் பிரயோகிப்போம்.
நேர்ந்தது என்னவென்று
நெடு நேரமாய்
கடும்பனியில் காத்திருந்தோம்!
எஜமானரிடம் ஆவேசமாய் ஓடி
எமக்கு நீ என்ன கொணர்ந்தாய்?
இதோ
இந்த ஒட்டுத்துணிதான்
எமக்காக நீ வென்றுவந்த
சாதனையோ?
நல்லது
ஒட்டுத்துணி இருக்கட்டும்;
ஆனல், மீதம்-
அணியும் அங்கி எங்கே?

என்று புரட்சிகரத் தொழிலாளர்கள்
சினந்து பாடுகிருர்கள். மேலும்,

எமக்குத் தேவை
துக்கடாக்கள் அல்ல-
நல்லாடைகளே
எமக்குத் தேவை
எலும்புத் துண்டுகள் அல்ல-
நல்லுணவே
எமக்குத் தேவை
எளியதோர் வேலை மட்டுமல்ல-
ஆலைகள் அனைத்தும்
நிலக்கரி வயல்களும்
தாதுவளங்களும்-
அதுமட்டுமா,
அரசின் அதிகாரம்
அதுவே எமக்கு வேண்டும்
என்றல்லவா கேட்கிறோம்!
என்று அவர்கள் பாடி முடிக்கிருர்கள்.





## ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் தமிழ் மக்களே!

நாம் எங்கிருக்கிறோம்? எமக்கு என்ன நடக்கிறது? நாம் அனுபவிக்கும் சித்திரவதைகளினால் ஓலமிடும் அவலக்குரல் கேட்கிறதா?

நாம் என்ன பட்டுமெத்தையில் படுத்துக்கொண்டா, அல்லது நேரத்திற்கு நேரம் உணவு, ஆகாரம் அருந்திக்கொண்டா எங்கள் சகோதரர்களாகிய உங்களிடம் ஆதரவு கேட்கிறோம்?

ஆம் நீங்கள் எங்கள் சகோதரர்களே! நீங்கள் எங்களை மறந்து அவர்களுக்கு என்ன நடந்தாலென்ன, என்று இன்று கைகட்டி சும்மா இருந்தாலும் உங்கள் உடம்பிலும் எங்கள் தமிழீழத் தாயின் இரத்தம் தனே ஓடுகின்றது!
இன்றில்லாவிட்டாலும் என்றுவது ஒரு நாளாவது அந்த, உங்களது இரத்தம் கொதித்தெழுந்து உங்களது கைகள் எங்களுக்காக, உங்கள் தாய் ஈன்றெடுத்த சகோதரங்களுக்காக ஓங்காதா? என்று இனவாத சிங்கள அரசினல் பல தாங்கொணுத சித்திரவதைகளுக்குள்ளாகும் நாங்கள் இன்னமும் நம்பிக்கொண்டே இருக்கின்றோம்.

### எம்மைத் தெரிகிறதா?
### எங்கள் குரல் கேட்கிறதா?

வெலிக்கடையில், தங்காலையில், பூஸாவில், நீர்கொழும்பில்
கோட்டையில் உள்ள நூற்றுக்கணக்கான இருண்ட சிறைக் கூடங்களுக்குள்
நம்பிக்கையின் கடைசிக் கிரணத்தில்
மட்டுமே உயிரைத் தாங்கி வைத்திருக்கிற அவல நிலையில் இருக்கும்
எங்கள் குரல் கேட்கிறதா?

இந்தக் கோடைகாலத்தின் இறுதிப்பகுதியில் உயர்ந்துள்ள வெப்பத்தில்,
திருவிழாச் சந்தடியில், போர் நிறுத்தம் என்ற மாயையில்
எங்களை, எங்கள் பெயர்களை, எங்கள் குரல்களை மறந்து
விடுவீர்கள் என்று அஞ்சுகிறோம்?

தலைகீழாகத் தொங்கவிடப்பட்டு கீழே நெருப்பு மூட்டப்பட்ட போதும்,
நகம் பிடுங்கிய ரணங்களின் மீது மிளகாய்த் தூள் இடப்பட்ட போதும்,
பாம்புகளை வாய்க்குள் செலுத்திய போதும்
'என் தேசமே!' என்றுதான் எம்மில் சிலர் அழுததை சிறையின்
உலர்ந்த கற்சுவர்கள் எப்படி உறிஞ்சியிருக்க முடியும்.

வதை கூட அறைச்சுவரில் சிதறிய குருதித் துளிகளுக்கும்
நினைவு திரும்பாமலே மரித்துப்போன எங்கள பக்கத்து அறைத் தோழர்களுக்கும்,
உங்களுக்குச் சொலவதற்கென்று ஆயிரம் கனவுகளை
நெஞ்சில் தாங்கி, அந்தக் கனவுகளுடனேயே
அநாதைகள் போல எங்கோ ஒருபெயர் தெரியாத காட்டிற்குள்
புதைக்கப்பட்டு விட்ட நண்பர்களுக்கும், இவை தொடர்கதை தான் என்பதை
எப்படிச் சொல்லப் போகிறீர்கள்?

'நமக்கென்ன என்று இட்டு, உண்டு இரும்!' என்று பழைய
தமிழில் ஔவை சொன்னதை எப்படி நீங்கள் திருப்பிச் சொல்ல முடியும்?
எமது துயரமும், எமது துன்பங்களும் உண்மையான மனித விடுதலைக்காக
உழைத்தமையின் பரிசுதான் என்றால் அவை
மகிழ்வுதான் தருவன. இந்தச் சிறைகூட வதை அறைகளுக்குள்
எழும் எமது அவலக்குரல்களில் நான் உண்மையான மனித நேயத்தின்
அவசியத்தை உணர்கிறோம்.
மிருகங்களுககு மத்தியில் இருக்கிற போதே மனிதத்தின் அருமை
எமக்குத் தெரிகிறது.

அன்புள்ள மக்களே,
அன்புள்ள நண்பர்களே,
அன்பான தேசமே
உயர்த்தி அடைத்த இரும்பு வேலியுள் இருந்து எழுகிற
எமது குரல்கள் உங்களைக் கேட்பதெல்லாம்
ஒன்றே ஒன்றுதான்-
போரிடுங்கள்-
அநீதிகளுக்கு எதிராக,
போரிடுங்கள்-
அடக்குமுறைகளுக்கு எதிராக,
போரிடுங்கள்-
மனித நேயத்திற்காக.

மணல்துகளை காற்று அடித்துச் செல்வதைப்போல
காலமும், காலனும் எங்களைக் கொண்டுபோய் தீர்ப்பதை
தடுத்து நிறுத்துங்கள்! உலகத்தின் மனச்சாட்சியின்
மெல்லிய நரம்புகள் மீது எமது அவலத்தையும், துயரத்தையும்
அதிர வைப்பதற்கு நாங்கள் உயர்த்தும் குரல்களுக்குத்
துணை கொடுங்கள்!
உயரும் கரங்களுடன் அணி திரளுங்கள்!

நன்றி தளிர்

படிப்பகம்

www.padippakam.com



எமது வெளியீடான SOLT பற்றிய விமர்சனங்களையும் வெளியிடுவதற்கான ஆக்கங்களையும் நாம் தமிழ் பேசும் மக்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். உங்கள் விமர்சனங்களையும் ஆக்கங்களையும்

"ஆசிரியர்குழு SOLT"

என விலாசமிட்ட கடித உறையிலிட்டு எமது முழு நேர ஊழியர் எவரிடமாவது கொடுத்து விடவும்.

நன்றி.

**THERE IS NO SUBSTITUTE TO TAMIL EELAM**

*In an urgent appeal to Tamils of Eelam and abroad, Mr Prabakaran, leader and military commander of the Liberation Tigers of Tamil Eelam, has requested funds for a national defence programme. He emphasised the urgency and necessity of protecting the civilian population during phases of a war of national liberation. The L.T.T.E., he said, has mooted a National Defence Fund for the purpose of implementing the programme of civil defence.*

# THE TIGERS ARE SUPERIOR

## *Lines of defence*

விடுதலைப புலிகளின் மனோதிடத்தையும் உறுதியையும் சிங்கள ராணுவத்தால் ஒரு போதும் அழித்து விட முடியாது. நாங்கள் மகத்தான தார்மீக வலிமையும். தியாக உணர்வும் உன்னதமான லட்சியப் பற்றும் கொண்டவர்கள்,

வே பிரபாகரன் (Sunday 11.3.84)



தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் பிரித்தானிய கிளையினது சகல விதமான தபால் தொடர்புகள் கீழ்கண்ட முகவரிக்கே மேற்கொள்ளுமாறும், விடுதலைப் புலிகளுக்கான நன்கொடைத் தொகைகளோ, அன்பளிப்புகளோ விடுதலைப் புலிகளின் பிரசுரங்களின் கொடுப்பனவுகளோ SOLT இற்கு அனுப்பும்போது காசோலைகளை SOLT என்ற பெயரிற்கே அனுப்பி வைக்குமாறும் மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறோம்.

ADDRESS :- SOLT,
BM Box 3694,
London WC1 N3XX.

**தமிழீழ விடுதலைப் புலிகளின் குரல்**

தொலைபேசி இல.

**01-475 0543**

லண்டன் வாழ் தமிழ் மக்களே!

அதோ தூரத்தே தெரிகிறது ஓர் விடிவெள்ளி! விடுதலையுணர்வைத்தூண்டும்,

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் (U.K)

நடத்தும்

புலிகளின் ... மாலை

ஒரு துளி கடல் நீர் இருக்கும் வரை அலைகள் ஓயப்போவதில்லை. களத்தில் தூரத்தே இடிமுழக்கங்கள் கேட்டுக்கொண்டேயிருக்கின்றன வானம் எப்படியிருப்பினும் தூறல்கள் தொடர்கின்றன. (முகில்கள் இருக்கும்வரை எப்படித் தூறல்கள் நிற்கும்.) தமிழீழப் பயணங்கள்முடிவதில்லை தொடர்கிறது.

"விடியலுக்கு இல்லை தூரம்"

"வெகுவிரைவில்"

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

படிப்பகம்